சத்திய வேத

# பாதுகாவலன்

Telegrams: "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. Telephone: No. 300.
REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER
"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

84-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1959-ம் ஆண்டு ஆவணி மாதம் 6-ந் திகதிவியாழக்கிழமை — பிரிதசம் 10 | 30-ம் இலக்கம்

# பரீஸ்மாநகரின் திருசேத்திரங்கள்

பிரான்ஸ்தேசத்தின் தலைப்பட்டணமாகிய பரீஸ்நகரைத் தரிசிக்கச்செல்லும் கத்தோலிக்க யாத்திரிகர்ஒருவரின் கண்ணையும், கருத்தையும் ஒருங்கேஈர்ந்து பக்திப் பரவசம் உண்டுபண்ணக்கூடிய எத்தனையோ திருசேத்திரங்கள் அங்குள்ளன. ஆனால், அவர் ஓர் தனிப்பட்ட திருயாத்திரிகராகச் சென்று அந்நகரைத் தரிசிக்க வேண்டியது அவசியம். அன்றேல் அந்தத்தரிசனை அவருக்குத் திருப்தியளிக்கமாட்டாது.

### நோட்றேடாம் ஆசனக்கோவில்

பரீஸ்நகரின் அதிகாரபூர்வமான மத்தியதலமாய் விளங்குவது, நோட்றேடாம்எனப் பிரபல்யமாய் அறியப்படும் ஆசனக்கோவிலேஎன்க. இதனை ஓர்மத்திய நிலையமாகக் கொண்டே அங்கு தூரந்தொலைகள் அளக்கப்படுகின்றன. இந்தஅலங்காரமான பூசிதஆசனக்கோவில் அதிகமான வழிகாட்டும்புத்தகங்களில் போதிய அளவாக வர்ணிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், அதிலே போதாதவிதமாய் எதுவும் வர்ணிக்கப்பட்டிருப்பின் அது தான் அத்தேவாலய பெரிய பலிபீடத்தின் வலதுபுறமாகவுள்ள திருசேத்திரம்.

### பிரசித்திபெற்ற சுரூபம்

இதிலுள்ள பரிசுத்ததேவதாயாரின் சரித்திரப்பிரசித்திபெற்ற அருள் பொழியும் திருச்சுரூபமானது பரீஸ்நகர கத்தோலிக்க மக்களால் பன்னெடுங்காலமாக அருமை பெருமை பாராட்டி அதிமிக பூச்சியமாகப் பாதுகாத்து வணங்கப்பட்டுவருகிறது. இது தவிர இந்தக்கோவிலில் மற்றுமோர் அழகிய சேத்திரத்தைக் கண்டுகொள்ளலாம். அதன் வடக்குச் சிறகுமண்டபத்தின் பக்கச்சிற்றாலயம்ஒன்றிலே இந்தோ-சீனாவில் வேதசாட்சியான முத். போல் ரிசென்எனும் குருவானவரின் புனிதஉடலை அடக்கிய பொன்முலாம்பூசிய பேழை இருந்துவருகின்றது.

### இரட்சகரின் திருமுள்முடி

நோட்றேடாம்ஆசனக்கோவிலை விட்டு வெளியேறுமுன் அதன் பொக்ஷசாலையைத் தரிசித்தல் வேண்டும். ஏனெனில், அங்கு தான் எல்லாவற்றிலும்மேம்பட்ட மாபெரும் பொக்ஷம் இருக்கின்றது. அஃது இரட்சகரின் திருமுள்முடியே. இந்த முள்முடியின் முட்களில் ஒன்றும் இப்போது அதில் இல்லை. ஏனெனில், அவைகள் நெடுங்காலத்தின் முன்னரே பெயர்த்தெடுத்துச் சிறுசிறு திருப்பண்டங்களாகப் பல கோவில்களுக்கும் பகிர்ந்து கொடுக்கப்பட்டு விட்டன. தற்போது அங்கிருப்பது முட்களே இல்லாத தண்டுகள் பின்னப்பட்டுள்ள வளையமேயாகும்.

நோட்றேடாமிலிருந்து சீன்நதியைக் கடந்துசென்றால் "பன்திபன்" என்று அறியப்படுகின்ற பூர்வீகஅஞ்ஞான அகிலதேவர்கள்கோவிலின் டோம்எனப்படும் வில்மச்சுமாடம் காட்சியளிக்கும். இந்தப்பாரியகோவில் இப்போது கைவிடப்பட்டு வழிபாடற்றதொன்றாய் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இதன் டோமை வழிபிடித்துச்சென்றால் அதற்குப் பின்புறமாகக் கண்ணுற்றாரின் உளங்களையெல்லாம் கவர்ந்துகொள்ளும் அர்ச். எற்றியென்துமொங்தின் கோவில் இருக்கின்றது.

### ஜெனேவியெவ் அம்மாளின்கல்லறை

இது சரித்திரபூர்வமாயும், சிற்பவேலைப்பாடு சம்பந்தமாயும் மாத்திரமல்ல, பரீஸ்நகரின் பாதுகாவலாளியான இளமங்கை அர்ச். ஜெனெவியெவ் அம்மாளின் சேத்திரத்தைக் கொண்டிருப்பதாலுமே பெரிதும்கவர்ச்சிக்குரியதாய் இருந்துவருகிறது. இந்தச்சேத்திரம் இப்போது அவளின்புனிதஎன்புகளை அடக்கிய கல்லறையைக் கொண்டில்லை. ஏனெனில், அப்புனிதஎன்புகள் பிரான்ஸிய அரசியற்புரட்சியின்போது, ஆங்காங்கு சிதறப்பட்டும், சிதைக்கப்பட்டும் போயின. ஆனால்,இப்போதுள்ள வெறுமையானகல்லறை பரீஸ்நகரமக்கள் அருமைபாராட்டிப் பூசித்துவரும் புனிதசின்னமாய்த் திகழ்கின்றது.

### தேவதாயார் காட்சியளித்ததலம்

சீன்நதியின் இடதுகரைப்புறமாகச்சென்று றூதுபாக்எனும் இடம்போய்ச் சேர்ந்தால் அங்கு ஒருசிற்றாலயத்தைக் காணலாம். சந்தடிநிறைந்த பரீஸ்நகரின்மத்தியிலே அமைதியும், சமாதானமும் நிலவும் ஓர்அழகியதலமாய்— இல்லை, சுவர்க்கத்திலிருந்தே விழுந்தஓர்கோணம்போன்றதாய் இது காட்சியளிக்கின்றது. இங்குள்ள இந்தச்சிற்றாலயத்தில்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# குடும்பசெபமாலை எதற்காக?

கிறீஸ்தவ குடும்பத்துக்குத் தேவஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொடுக்கச்சிறந்தவழி, தகப்பன் தாய், பிள்ளைகள் யாவரும் ஒருமித்து நாள்தோறும் செபமாலை செபிப்பதே.

ஏன் குடும்பசெபமாலை செபிக்க வேண்டும்.

1. "எங்கே இரண்டு அல்லது மூன்றுபேர் என்நாமத்தால் கூடியிருக்கிறார்களோ அவர்கள் மத்தியில் நான் இருக்கிறேன்" என யேசு வாக்களித்திருக்கிறார். குடும்பத்தினர் செபமாலை செபிப்பதற்காக ஒன்றிக்கும்போது கடவுள்பேரால் கூடுகிறார்கள். கடவுளைத் தங்கள்மத்தியில் கொண்டுவருகிறார்கள்.

2. குடும்பசெபமாலை செபிக்க அவர்கள் கூடுகையில், உலக தாய், தகப்பன், மகன், மகள் இவர்களைப்போல் அவர்கள் ஒருமிப்பதில்லை; ஆனால், கடவுளுடையமக்களாக, கடவுளைத் தகப்பனாகவும், மாசற்றமரியாயை மாதாவாகவும்கொண்ட தேவ குடும்பத்தின் அங்கத்தினராக ஒன்றிக்கின்றார்கள்.

3. குடும்ப செபமாலையானது பெற்றோரையும் பிள்ளைகளையும் ஒருமனப்படுத்துகிறது. தற்கால உலகப்போக்கினால் பலவீனப்படுத்தப்பட்டிருக்கும் குடும்பத்தை அதுகுணப்படுத்துகிறது. குடும்பத்தினர் வெவ்வேறிடங்களில் அலுவல்கள் செய்கின்றனர். சுயநலம் அவர்களை ஆட்கொள்ளுகிறது. குடும்பசெபமாலை அவர்களை ஒவ்வொருநாளும் சிலநிமிஷமாவது ஒற்றுமைப்படுத்திக் கடவுளையும், அவரது திருமாதாவையும்நோக்கி அவர்கள்நேசத்துடன் செபிக்கும்படி செய்கிறது.

4. இன்றையஉலகில் தாண்டவமாடும் நாஸ்தீகபோக்குக்குக் குடும்பசெபமாலை நல்லஓர் மருந்து. மற்றெந்தக் காலத்தையும்விட இந்தக்காலத்தில் குடும்பவாழ்க்கையைப் பாதுகாக்கக் கூடிய ஒருபலமுள்ள ஆயுதம் தேவை. கிறீஸ்துவவாழ்க்கையின் சென்மசத்துருக்களான உலகப்போக்கும், உலகக்கொள்கைகளும் முதலில் குடும்பத்தையே பாதிக்கின்றன. பத்திரிகைகளும், புத்தகங்களும் தற்கால உலகக்கொள்கைகளை வீட்டுக்குள் கொண்டுவருகின்றன. யாவரும் வாசிக்கும்படி அவைகள் மேசையிற் கிடக்கின்றன. தற்கால சினிமாப்படங்கள் குடும்பவாழ்க்கையைப் பரிகசிக்கின்றன. இன்றையஉலகம் காப்பாற்றப்படவேண்டுமானால் குடும்பம் முதலில் காப்பாற்றப்படவேண்டும். அதற்கு மிகஅவசியமான கருவியைக் கடவுள் நமக்குக் கொடுத்திருக்கிறார். அது குடும்ப செபமாலையே. தீமையைஎதிர்த்து நிற்க அதற்குமிகுந்த வல்லமையுண்டு. செபமாலையின் வரலாறு அதை நமக்குத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. குடும்பசெபமாலையானது பெருங் காரியங்களைச் சாதிக்க எத்தனமாகிறது.

5. தேவஅழைத்தலைப் பிறப்பிக்கக்கூடிய சிறந்தசாதனம் குடும்பசெபமாலை. ஒருகத்தோலிக்க விசாரணைப்பங்கில் குடும்பவாழ்க்கை பலவீனநிலையில் இருக்குமானால், அபூர்வமாகத்தான் தேவஅழைத்தல் இருக்கும். கத்தோலிக்கசீவியமும் அவ்வளவு பலமுள்ளதாய் இராது. குடும்பவாழ்க்கை பலப்படுத்தப்படுமானால், கத்தோலிக்கசீவியம் அந்த விசாரணைப்பங்கில் செழித்தோங்கும். அநேகர் கடவுளின் அழைப்புக்குச் செவிசாய்ப்பார்கள். ஆதலின் உங்கள் உள்ளத்தின் பாசறையையும், இல்லத்தையும் திருச்செபமாலையின் இராக்கினியான மாமரிக்குத் திறந்துவிடுங்கள்.

# மட்டக்களப்பு தாண்டவன்வெளித் தபால்

**அர்ச். லொயலா இஞ்ஞாசியார் திருநாள் :** யேசுசபை ஸ்தாபகரும், திருமலை மேற்றிராசனத்தின் பாதுகாவலரும், நம்மேற்றிராசன ஆயர் மகாவந். இக்னேஷஸ் கிளென்னி, எஸ். ஜே. ஆண்டகை அவர்களின் பெயர் கொண்ட அர்ச்சியசிட்டருமான அர்ச். லொயலா இஞ்ஞாசியார் திருநாள் சென்ற ஆடித்திங்கள் 31-ம் நாள் வந்து போனது.

திருநாளின் முன்தினமாகிய வியாழனன்று பிற்பகல் மூன்றுமணியளவிலே இப்பகுதியிலுள்ள பாடசாலைகளைச் சேர்ந்தவர்கள் மேற்றிராசனமாளிகை சென்று ஆண்டகை அவர்கட்குத் திருநாள் சுபசோபனம்கூறும் வழமையை மேற்கொண்டு நமது பங்கிலுள்ள கிளென்னி ஆண்–பெண் கழக ஆசிரியர்கள், மாணவர்கள் ஊர்வலமாகச் சென்று மாளிகைமுன்றிலில் கூடினர். ஆண்டகைஅவர்கள் சமுகமளித்ததும், ஆனந்த ஆர்ப்பரிப்புகளிடையே மலர்மாலைகள் சூட்டி, ஞானப் பூச்செண்டுகள் அளித்து, வாழ்த்துப்பண்கள் பாடி நின்றனர்.

அதன்பின் அவர் தமக்குச்செய்யப்பட்டவைகளுக்காக நன்றித்துதி கூறி, வெந்தணலாய் எரிக்கும் வெயிலினூடே தாண்டவன்வெளி நின்றுவந்து தம்மைச் சந்தித்தமையையும், கிளென்னி பெண்கள் கழகத்தினரின் ஞானப்பூச்செண்டினுல் காட்டப்பெற்ற உதாரகுணத்தையும் உவகைபொங்கப் பாராட்டித் தமது திருக்கர ஆசிரளித்துத் திருக்கணையாழி முத்தமும், மிட்டாய்களும் வழங்கினர். பின்னர் இரு பாடசாலையினரும் இன்னுரை யாடி மீண்டனர். திருநாளாகிய வெள்ளிவாரம் விடிந்தது. தாண்டவன்வெளி, புளியடிக்குடாப் பங்கினரும், இப்பகுதியிலுள்ள பாடசாலைகளைச்சேர்ந்தவர்களும், பத்திச்சபையினர், சந்நியாசர், கன்னியாஸ்திரிகளுமாகப் பெருந்திரளானேர் புளியந்தீவு மாதாகோவிலில் குழுமினர்.

ஆயர் தமதுமந்தைகளை நோக்கிய வண்ணம் பலிபீடத்தின் முன்னுல் அமர்ந்ததும், புளியந்தீவுப் பங்குக்குவர் வண. ஹென்றி பொன்னையாசுவாமிகள் ஆயருக்கென ஆங்குசமுகமளித்திருந்த ஒவ்வோர் குழுவினராலும் பூசையின்பொருட்டு அளிக்கப்படும் காணிக்கைப்பணம்கொண்ட காகித உறைகளை வரிசைக்கிரமமாக அவர்கையில் சேர்ப்பிக்கும்படிகேட்டு, முந்தத் தாமேகொடுத்து வழிகாட்டினர். தொடர்ந்து ஒவ்வோர்குழுவினதும் பிரதிநிதிகள் தங்கள்காணிக்கைக்காகித உறைகளை அளித்துநின்றனர். இவற்றுள் நமதுபங்கினரதும், இப்பங்கிலுள்ள வயோதிபர்தாபனக் கன்னியரதும், வயோதிபரதும் காணிக்கைகள் விசேஷபாராட்டுதலுக் குரியனவாயினமை குறிப்பிடற்குரியது. பின்னர் மேற்றிராணியாண்டவரால் திவ்வியபலிபூசை நிறைவேறியது. திரளானேர் திருவிருந்தருந்தித் தங்கள்ஆயருக்காக வேண்டிக்கொண்டனர்.

**நமதுபங்குத் தேவாலயத்தில்:** அடுத்தஞாயிறன்று (2-8-59) நமது பங்குத் தேவாலயத்தில் அர்ச். லொயலா இஞ்ஞாசியார்திருநாள் கொண்டாடப்பட்டது. அன்றுகாலை 5-30மணிப் பூசை தனிப்பூசையும், 7மணிப்பூசை பாடற்பூசை (பிள்ளைகள்பூசை) யுமாகக் கட்டளைக்குரவர் வண. ஜி. ஈ. எல். வம்பேக்சுவாமிகளால் நிறைவேறின. பூசையின்போது எம்தமேற்றிராசனத்தின் பாதுகாவலரான அர்ச். லொயலா இஞ்ஞாசியாரினது சீவியவரலாறுபற்றியும், நமதுஆயருக்காக அனைவரும் வேண்டிக்கொள்ள வேண்டியதன் அவசியம்பற்றியும் ஓர்பிரசங்கம் செய்யப்பட்டது. பூசைகளின்பின் அர்ச்சியசிட்டரின் திருப்பண்டம் விசுவாசிகளுக்கு முத்திசெய்யக் கொடுக்கப்பட்டது. பூசையின்முன்னும் பின்னும் ஜாலல பான்ட்வாத்தியம முழங்கித் திருநாளைப் பரிமளிக்கச்செய்தது.

**வயோதிபர்தாபனத்தில் யாத்திரைக் கன்னிகை:** தாண்டவன்வெளிப்பங்கில் கடந்தமூன்றுமாதகாலமாகச் சுற்றுலாசெய்துவரும் பாத்திமாஅன்னை சென்ற 30-7-59 வியாழனன்று மாலை 7மணியளவில் வயோதிபர்தாபனத்தில் வரவேற்கப்பட்டார். வயோதிபர்கள் மாதாவின் வர்ணங்கள் கலந்தகொடிகள் அழகுக்கழகுசெய்து அசைந்து ஆடிக்கொண்டிருந்த வீதிவழியே மெழுகுவர்த்திகளுடன் காத்திருந்தனர். அண்மையிலிருந்த இல்லத்திலிருந்து பாத்திமாமாதாசுரூபம் சுற்றுப்பிரகாரமாகத் தாபனவாயிலை அடைந்ததும் சங். பெரியதாயார் உட்பட நான்குகன்னியாஸ்திரிகள் கன்னியரின் இராக்கினியைத்தாங்கி ஆலயத்தை அடைந்தனர். அங்கு அலங்கிர்த காட்சியுடன் இலங்கியபீடத்தில் திருச்சுரூபம் வைக்கப்பெற்று வரவேற்பு நடாத்தப்பெற்றது. இப்பங்கிலுள்ளார் இவ்வைபவத்தில் பெருந்திரளாகக் கலந்துகொண்டனர் விசேஷநிகழ்ச்சிகள் புகைப்படங்களில் பதிக்கப்பெற்றன. அன்றிரவு 12மணிவரை வணக்க வழிபாடுகளில் கலந்துகொள்வோருக்காகக் தாபனவாயில் திறந்துவைக்கப்பட்டிருந்தது. இரவுபகல் இடையறுது வணக்கவழிபாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அடுத்தநாள்மாலை முந்தியவைபவங்களோடு பாத்திமா அன்னை இத்தாபனத்தைவிட்டு அடுத்த இல்லத்திற் கெடுத்துச்செல்லப்பெற்ருர். தாபன தலைமைத்தாயாரும், ஏனைய கன்னியாஸ்திரிகளும் கட்டளைக்குரவருக்கும், சமுகமளித்திருந்தார்க்கும் நன்றிகூறினர்.

— நிருபர்

# தேவநற்கருணைத் திருநாள்

## தெஹிவலை

பலிபீடத்தில் எழுந்தேற்றஞ் செய்து வைத்தார். அப்போது பலிபீடம் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு அழகு பொலிந்து காணப்பட்டது. மணித்தியாலம்தோறும் குறிக்கப்பட்டசபையோர் பிரத்தியேக வழிபாடுசெய்தனர். பக்தர்கள்நிறைந்த நாளாகவே ஆலயம் அன்று காட்சியளித்தது.

பிற்பகல்4மணிக்குச் சற்பிரசாதநாதரின் ஊர்வலஒழுங்குகளைக் கட்டளைக்குரவரவரும், வண. பேணுட் பெறேரு குரவருமகவனிக்க, வண. சாள்ஸ்குரவரும், வண. எவ். சேவியஸ்குரவரும் இருமருங்கும் துணைநிற்க, பரிசாரகர்கள் புடைசூழ வண. லேபிற டொன் குரவரவர்கள் சற்பிரசாத கதிர்ப்பாத்திரத்தைக் காத்தேந்தினர். வீதிகள் தோறும் அலங்கார தோரணங்களும், பந்தர்களும், பக்தர்களும் அழகாகக் காட்சிதர, குரவர்களும, கத்தோலிக்க மக்களும் அணிவகுத்துச்செல்ல ஊர்வலம்ஆரம்பமானது. தெஹிவலை, சென்மேரீஸ்பாடசாலை மாணவர்கள் புனிதஆடைகளுடன் ஊர்வலத்தில் சற்பிரசாதநாதருக்குப் புஷ்பாஞ்சலி செய்தமை பக்திப்பரவசம் உண்டுபண்ணுவதாய் இருந்தது.

ஆலயமணிகள் ஆர்ப்பரிக்க ஊர்வலம் திரும்பவும் ஆலயத்தைஅடைந்து பலிபீடத்தில் சற்பிரசாதநாதரை எழுந்தருளவைத்ததும் "தெதேயும்" எனப்படும்தேவதோத்திரகீதம் பாடப்பட்டது. அதன்மேல் அகிலஉலகத்தையும் யேசுவின்திருஇருதயத்துக்கு ஒப்புக்கொடுக்கும்செபம் சொல்லப்பட்டுச் சற்பிரசாதஆசீர்வாதத்துடன் திருநாள் இனிதுமுடிவெய்தியது.

தெஹிவலை, அர்ச். மரியநாயகியின் ஆலயத்தில சென்ற19-7-59ஞாயிற்றுக்கிழமை சற்பிரசாதத்திருநாள் அதிபக்திச்சிறப்புடன் கொண்டாடப்பட்டது. அன்றுகாலை 8மணிக்குக் கட்டளைக்குரவர் வண. சிறில் பீரிஸ் சுவாமியவர்கள் தேவநற்கருணையைப்

நிற்க, எதிரேவரும் 1960-ம்ஆண்டு மாசிமாதம் தெஹிவலை அர்ச். மரியநாயகிஆலயத்தின் 125-ம்ஆண்டு நிறைவுவிழாகொண்டாடப்பட விருப்பதும் ஈண்டுகுறிப்பிடத்தக்கதாகும்.

பொலிக்காப் கோமஸ்

# சந்தானுள் திருநாள்

## தனுவில்

கரம்பனூரிலிருந்து தெற்கே சுருவிலைநோக்கிச் செல்லும்வீதியில் குறுக்குக்கடலையடுத்து அர்ச். அன்னம்மாள் பெயரால் சென்றஆண்டு ஒரு சிற்ருலயம் கட்டப்பெற்று, பலிபீடம் ஆசீர்வதிக்கப்பட்டுத் திருநாட்பூசை மாத்திரம் நிறைவேறியது அநேகருக்கு ஞாபகத்திலிருக்கலாம். இச்சிற்ருலயம் ஒருவருடத்துள் பெருந்தொகையான பக்தர்களைக்கவர்ந்து அர்ச். அன்னம்மாளின் அருளால் இன்று பிரஸ்தாபம்பெற்று விளங்குகின்றது.

கட்டாந்தரையாய்ச் சனசஞ்சாரமற்று, மக்கள் இரவிலே அவ்வழியாகப் பிரயாணஞ்செய்யப் பயந்திருந்த இடத்திலே இன்று சந்தானுள்நாயகி அருள்மாரி பொழியத்தொடங்கிப் பன்னூற்றுக்கணக்கானேரைத் தம்மிடம் அழைத்து வருகிருர். சென்ற 26-ந் திகதி இப்பதியிலே சந்தானுள் திருநாள் யாவரும் பிரமிக்கத்தகுந்த வகையில் நடந்தேறியது. 17-6-59-இல் கொடியேற்றத்துடன் ஆரம்பமான நவதின உற்சவங்கள் மாலையில் திவ்வியபூசை, செபமாலை, தேவநற்கருணை ஆசீர்வாதம் முதலியவற்றுடன் நிறைவாகிவந்தன. 26-ந் திகதிமாலை வேஸ்பர் என்னும் மாலை ஆராதனையின்பின் திருச்சுரூப சுற்றுப்பிரகாரமும், திவ்வியநற்கருணை ஆசீர்வாதமும் நடைபெற்றன. மறுநாட்காலை பாடற்பூசையுடன் திருநாள் இனிதேநிறைவெய்தியது. நவநாள் முடிவுதினமன்று பன்னூற்றுக்கணக்கான பக்தர்கள் திருப்பதியிலே சமுகமாயிருந்து சந்தானுள்நாயகியைப் பக்திசெய்துநின்றகாட்சி கண்கொள்ளாப் பரவசகாட்சியாயிருந்தது.

# அரிசியின் உணவுச்சத்து

சி. வை : கே. எஸ், பரிபூரணுநந்தர்

உலகில்வாழும் மக்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள் அரிசிச்சாதத்தையே தங்கள் முக்கிய உணவாக்கிக்கொண்டுள்ளார்கள். அத்துணை முக்கியமான அரிசிஉணவைப்பற்றிய சில உண்மைகளை நாம் அறிந்திருக்கவேண்டியது அவசியமாகும். இன்று எமது நாட்டில் வியாதிகள் அதிகம்பரவ ஒருகாரணம், நாம் அரிசிச்சாதத்தைப் பிழையானமுறையில் தயாரித்து உண்பதேயாகும. சத்துள்ள தவிட்டுடன்கூடிய அரிசிஇனங்கள் அதிக நாட்களுக்குக் கெட்டுப்போகா திருப்பதில்லை. நெல்லின் உமிக்கும், அரிசிக்குமிடையே காணப்படும் சிவப்புநிறமுள்ள தவிடுதான் கொழுப்புச்சத்துடன் அயச்சத்தும் உடையது. இதிலுள்ள வைற்றமின்சத்துகளும், "மினறல் சோல்ற்" எனப்படும் கனிஜஉப்புகளும் அதிக நாட்களுக்குச் சேமித்துவைக்கப்படும் அரிசியில் கெட்டழிந்துவிடுகின்றன. இக்காரணங்களைக் கொண்டுதான் எம்முன்னேர் நெல்லை அவ்வப்போது குத்தி அரிசியாக்கி உபயோகப்படுத்தினர்கள்.

பிறநாடுகளிலிருந்து எமதுநாட்டில் இறக்குமதியாகும்அரிசியை நெல்லாகப் பெறுவதென்றல் அது ஏற்றுமதிக்கு அதிகபளுவாகிச் செலவு அதிகரிக்கும். அதனுல்தான் அரிசியாக்கப்பட்டு எமதுநாட்டுக்குக் கப்பல்கள்மூலம் அனுப்பப்படுகிறது. தூரதேசங்களில் நெல் அரிசியாக்கப்பட்டுக் கப்பல்களிலே பலநாள்மூடைகளாய்க் கிடந்து பின் நம்முடைய நாட்டில் இறக்குமதியாகிக் கிட்டங்கிகளிலே மாதக்கணக்கில் கிடந்தபின் நமக்குக் கிடைக்கிறது. இவ்வாறு இருப்பில் கிடக்கும்அரிசி விரைவில்கெட்டு அதில் கெட்டமணமும் உண்டாகி விடுகிறது. இவ்வித கஷ்டங்களையும், அதனுல் உண்டாகும் நஷ்டங்களையும் நீக்கிக் கொள்ளச் சிலஉபாயங்களைப் பெரிய மொத்தவியாபாரிகள் கண்டுபிடித்தார்கள். நெல்லின் உமிக்கும், அரிசிக்குமிடையே காணப்படும் வைற்றமின்சத்துகள்என்ற உயிரூட்டிகள், கனிஜஉப்புச்சத்துகள், அயச்சத்து ஆதியவற்றை அடியோடுநீக்கி வெறும்வெள்ளை அரிசியாகமட்டுமே ஆக்கப்பட்டால் இந்த அரிசி அதிககாலத்திற்குக் கெட்டுப் போகாதிருக்குமெனக் கண்டறியப்பட்டது. இது பார்வைக்கும் அழகாயிருக்குமென்றும் தெரியவந்தது. இவ்விதம்செய்ய இயந்திரசாதனங்கள் கையாளப்பட்டன. இப்பொழுது எங்குபார்த்தாலும் அரிசிகுத்தும் ஆலைகள் அதிகரித்து வருகின்றன. அறியாமையுள்ள மக்கள்சிலர் தவிடு நீக்கப்பட்ட அரிசியையும் மக்குநிறமாயிருக்கிறதென்று மேலும்தீட்டி வெள்ளையாக்குகிருர்கள்.

இறக்குமதியாகும் அரிசியிலே இன்னும்பல மர்மங்கள் உண்டு. அரிசிகுத்தும் பெரிய ஆலைகளில் தினமும் நூற்றுக்கணக்கான நெல்மூடைகளை அவித்துக் காயவிட்டு அரிசிகுத்தும் விதம் வெறும் வியாபாரச்சூழ்ச்சியே. சில நாடுகளில் நெல்லை அவியவிடுவதிலே இரசாயனமுறையில் சுருக்கமானவழி கண்டுள்ளார்கள். இதில் சுண்ணும்பிட்டும் அவிக்கப்படுகிறது.

இத்தனைக்கும் உள்ளாகி எத்தனையோமாதங்கள் கிடையில்கிடந்து, கப்பலில்கிடந்து வந்துசேரும் பிறநாட்டரிசி சத்தான உணவாகுமா? முற்காலத்திலே இந்தியா, பர்மாமுதலிய நாடுகளிலிருந்து நெல்லாகவே தனிப்பட்ட வியாபாரிகள் பலஇனங்களில் வரவழைத்துத்தந்தார்கள். அப்பொழுது மக்கள் திடகாத்திரராய் வாழ்ந்தார்கள். இன்று நமது தேகநிலை என்ன? தவிடு நீக்கப்படாத அரிசியின் சத்துக்களைச் சற்றே கவனித்தால் நூற்றுக்கு நீர் 13·1 வீதமும், புரதம் 7·8 வீதமும், கொழுப்பு ·8 வீதமும், கரிநீரகை 70·5 வீதமும், நார்த்தன்மை 6·8 வீதமும், கனிஜஉப்பு 1·0 வீதமும் இருப்பதைக் காணலாம்.

இரும்புச்சத்து பழங்களிலும், பச்சைக் காய்கறிகளிலும், கீரைவகைகளிலுங்கூடக் காணப்படுகின்றது. இந்த வகையில் தாவர உணவுண்டுவாழும் மிருகங்கள் இரும்புச்சத்துக் குறைவினுல் ஏற்படும்நோய்களுக்கு அகப்படுவதில்லை. ஆனுல், மாமிச போசனம் உண்ணும் மிருகங்களுக்கு இவ்வித நோய் உண்டாகக் காண்கிருேம். கொழுப்பு உணவிலும், சீனியிலும், "ஸ்ரார்ச்"எனப்படும் பிசிதஉணவிலும் இரும்புச்சத்து மிகக் குறைவு. பரிசோதனைகள்பல நடத்தியதன் மூலம் ஒருமுழுமனிதன் தினசரி உணவுமூலம் ·15 கிறும் இரும்புச்சத்தை உட்கொள்ள வேண்டும்எனக் கண்டறியப்பட்டுள்ளது. ஒரு கிலோகிறும் நிறையுடைய குழந்தை தினசரி ·5 மில்லிகிறும் இரும்புச்சத்தை உட்கொள்ள வேண்டும்.

# வேனிற்காலமாளிகையிலே முதன்முறையாகப் பாப்பரசர்

அருளப்ப பாப்பரசர் தாம் திருச்சபைத்தலைவராக நியமனம் பெற்றபின் தம்முடைய முதலாவது கோடைகால விடுமுறை நிமித்தமாக ரோமாபுரியிலிருந்து 13 மைல் தூரத்திலே காஸ்தெல் காந்தல்போவிலுள்ள பாப்பரசின் மாளிகைக்கு அன்று ஞாயிற்றுக்கிழமை செல்லலாயினர். ஆனால், அவரே கூறியுள்ளபடி, வருடந்தோறும் 12-ம் பத்திநாதப்பாப்பானவர் தங்கியது போல அங்கே அதிககாலம் தங்கியிருப்பார்போல் இல்லை. அம்மாளிகை போய்ச்சேர்ந்து சிறிது வேளையின்பின் அவர் அதன் மாடி முகப்புக்குச் சென்று கீழே முற்றத்தில் நெருக்கமாகக் குழுமியிருந்த பதினாயிரம்மக்களுக்குத் தமது ஆசி வழங்கலாயினர். அதன்மேல் தாம்அங்கு "அநேக நாட்கள் அல்லது ஒருகால்அநேக வாரங்களுக்குத் தங்கியிருக்கலாமெனத் தாம் நம்புவதாகத் தெரிவித்துநின்றார்.

தற்போது 77 வயதுடையவரான பாப்பரசர் வெப்பத்தையும் பாராமல் ரோமாபுரியிலே தமது கடமைகளைத் தொடர்ந்து நடத்தவேண்டுமென ஆவல்கொண்டிருந்தார். ரோமாபுரியின் கோடைகால வெப்பத்துக்குத் தப்பிக்கொண்டு காஸ்தெல் காந்தல்போ செல்வதற்குச் சிரத்தையற்றிருந்தார். அதனால் வத்திக்கான் மாளிகையிலுள்ள தமது அறைகளிலே வெப்பசாந்தி செய்யும் கருவிகளை அமைக்குமாறு உத்தரவிட்டிருந்தார். ஆனால், தமது டக்றர்மாரின் ஆலோசனையின் பேரில் தான் அவர் வத்திகக்கானைவிட்டு வெளிகொண்டு கோடைகால மாளிகையிலே சொற்பகாலத்தைச் செலவிடுவதற்குச் சம்மதித்தார்.

அவர் புறப்பட்டுப் போகுமுன் காஸ்தெல் காந்தல்போவிலே வாரந்தோறும் புதன்கிழமையிலும், சனிக்கிழமையிலும் மாலை 6 மணிக்கு இருபொதுப்பேட்டிகள் அளிக்கவிருப்பதாகத் தெரிவித்துச்சென்றார். அம்மாளிகையிலே பெருந்தொகையான மக்கள் குழாங்களுக்குப் போதிய இடவசதியில்லாக் கஷ்டத்தை முன்னிட்டு அர்ச். பேதுருவானவர் மகாதேவாலயத்துக்கும், காஸ்தெல் காந்தல்போவுக்குமிடையே விசேஷ வானொலித் தொடர்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதனால், காஸ்தெல் காந்தல்போவிலே பாப்பரசர் நிகழ்த்தும் சொற்பொழிவுகளை ஒலிபெருக்கிகள்மூலம் ஏககாலத்தில் அர்ச். பேதுருவானவர் மகாதேவாலய முற்றத்தில் கூடியிருக்கும்மக்கள் கேட்கக்கூடியோராய் இருக்கின்றார்கள்.

# வேளாங்கண்ணித் திருசேத்திரத்தில் சென்னைக் கவர்னர்

சென்னைக்கவர்னர் ஸ்ரீபிஷ்ணுராம் மெடி அவர்கள் தமது பாரியார் சமேதராய்ச் சென்ற ஆடி மாதம் 8-ந் திகதி புதன்கிழமை தென்னிந்தியாவிலே பிரபலம் பெற்ற வேளாங்கண்ணி அர்ச். ஆரோக்கியமாதாவின் திருசேத்திரத்திற்கு விஜயஞ் செய்யலாயினர். அவரும், அவர் கோஷ்டியினரும் அன்றுகாலை 9-30 மணிக்கு அங்குபோய்ச்சேரவே திருசேத்திர பங்குக்குரவர் அதிவண. மைக்கேல் றொட்றிக்குஸ் சுவாமிகள் மாலைசூட்டிக் கவர்னரை வரவேற்றார். அதன்மேல் தஞ்சாவூர் மேற்றிராணியாராகும் மகா வந். ஆர். ஏ. சுந்தரம்ஆண்டவர் அங்கு சமுகமாயிருந்த குருமாரை அவருக்கு அறிமுகஞ்செய்து வைத்தபின்னர் அவரைத் திருசேத்திரத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு மேற்றிராணியார் அத்திருசேத்திரத்தினதும், அதன் பிரதான பலிபீடத்திலுள்ள அர்ச். ஆரோக்கியமாதாவின் அற்புத திருச்சுரூபத்தினதும் ஆரம்பவரலாற்றைச் சுருக்கமாக எடுத்துக் கூறியதன்மேல், அவரும், அவர் கோஷ்டியினரும் பங்குக் குருமனையிலுள்ள நன்றியறிந்த தோத்திர காணிக்கைப் பொருட்களைக்கொண்ட நூதன பொருட்காட்சிச் சாலைக்குச் சென்றனர். அங்கு மேற்றிராணியார் ஆரோக்கிய மாதாவின் சலுகையினால் அருளப்பெற்ற கணிக்கத்தகுந்த முக்கியமான அற்புத ஆரோக்கியங்களையும், அனுக்கிரகங்களையும்பற்றி அவர்களுக்கு விளக்கமாக எடுத்துக் கூறினார். இந்துக்களும், கிறிஸ்தவர்களும், முஸ்லீம்களும், பார்ஸிகளும் தாங்கள்பெற்றுக்கொண்ட அனுக்கிரகங்கள், ஆரோக்கியங்களுக்கு நன்றியறிந்த தோத்திர காணிக்கைகளாக ஆரோக்கிய மாதாவுக்குச் சமர்ப்பித்த பொருட்களையெல்லாம் அங்கே கவர்னர் பார்வையிட்டுப் பெரிதும் மனவருட்சி கொள்ளலாயினர். அவ்வேளை பங்குக்குரவர் அழகாகக் கட்டப்பெற்ற திருசேத்திரத்தைப்பற்றிய புத்தகம் ஒன்றையும், அத்திருசேத்திர சம்பந்தமான பிரதிமைகளைக் கொண்ட அல்பம ஒன்றையும் அவருக்கு அன்பளிப்புச் செய்தார்.

---

## குருடரான கன்னியாஸ்திரிமார்

ஒல்லாந்திலே ரில்பேர்க் நகரிலுள்ள பிறர்சிநேகசபைக் கன்னிகாமடத்திலே சமீபத்தில் குருடர்களான நான்கு கன்னியாஸ்திரிமார் நித்திய வார்த்தைப்பாடு கொடுத்திருக்கின்றனர். அங்ஙனம் வார்த்தைப்பாடு கொடுப்பதற்குச் சந்நியாச – கன்னிகா சபைகளைப் பரிபாலிக்கும் திருச்சங்கம் அநுமதியளிக்கலாயிற்று. இந்த நான்கு கன்னியாஸ்திரிமாரும் பிறர்சிநேகசபைக் கன்னியாஸ்திரிமாரால் நடத்தப்பட்டு வரும் குருடர்களுக்கான ஸ்தாபனங்களிலே பணியாற்றுவார்கள். இவர்களில் இருவர் ஆசிரியைகள்.

—*—

# இரட்சகரின் திருஅங்கிக் காட்சி

திவ்வியகர்த்தர் சிலுவையில் அறையுண்டபோது, அவர் அணிந்திருந்த தையலில்லாத திருஅங்கியானது, வடமேற்கு ஜேர்மனியிலுள்ள திறியர்நகர் ஆசனக்கோவிலிலே சென்ற ஆடிமாதம் 19-ந் திகதி ஞாயிறன்று கொலோன்நகர் அதிமேற்றிராணியாரான கருதினால் யோசெவ் பிறிங்ஸ்ஆண்டவரால் பகிரங்க காட்சிக்கும், வணக்கத்துக்குமாகத் திறந்துவைக்கப்படலாயிற்று. இம்முறை உலகின் சகல பகுதிகளிலுமிருந்து இருபதுலட்சம் மக்களுக்குமேல் சென்று இதனைத் தரிசிப்பார்களென எதிர்பார்க்கப்படுகிறது. அன்றுமுதல் வருகிற புரட்டாசி வரை இது காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும். இதை முன்னிட்டுத் தினமும் சராசரியாகப் பதினாயிரம் தரிசகர்களை வரவேற்பதற்குத் திறியர்நகர் தயாராயிருக்கிறது. பிரத்தியேக இல்லங்களெல்லாம் அவர்களுக்குத் திறந்துவிடப் பட்டிருக்கின்றன. ஒன்பதாம்முறையாகவே இத்திருஅங்கி இம்முறை பகிரங்ககாட்சிக்குத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. கடைசிமுறையாக இது 1933-ம் ஆண்டு காட்சிக்கு வைக்கப்பட்டபோது இருபதுலட்சம் பேருக்கு மேற்பட்ட யாத்திரிகர்கள் சென்று அதனைத் தரிசித்தார்கள். பாரம்பரியம் தெரிவிக்கிறபடி, பெரிய கொன்ஸ்தந்தீன் சக்கிரவர்த்தியின் தாயாரான எலேனாசக்கிரவர்த்தினியால் திறியர்நகர் மேற்றிராணியாருக்கு இத்திருஅங்கி வழங்கப்படலாயிற்று. இது முதன்முறையாக 1512-ம் ஆண்டு பிரசித்த காட்சிக்கு வைக்கப்பட்டது.

---

### பாகிஸ்தானும்
### பாப்பரசரின்
## மகிமைப்பட்டமும்

பாகிஸ்தானின் அதிகாரி ஒருவரோ, அன்றேல் அதன் இராசியப் பிரதிநிதி ஒருவரோ, அல்லது பிரசைஒருவரோ பரிசுத்த பாப்பரசரால் சன்மானிக்கப்படும் மகிமைவரிசையை அல்லது சன்மானத்தை ஏற்றுக்கொள்வதற்கும், அணிந்துகொள்வதற்கும் முன்னதாக அரசாங்கத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வது அவசியமா என்பது பற்றிச் சிலகாலமாகப் பாகிஸ்தான் அரசாங்கம் ஆலோசனை செய்துவரலாயிற்று. பாப்பரசரின் மகிமை வரிசையை அன்றேல் அவரின் சன்மானத்தை ஏற்றுக்கொள்வதற்கோ, அன்றேல் உள்நாட்டிலோ, வெளிநாடுகளிலோ ஏற்றவேளைகளில் அணிந்துகொள்வதற்கோ முன்னதாகத் தனது அங்கீகாரத்தைப் பெறவேண்டிய அவசியமில்லையென்று பாகிஸ்தான் அரசாங்கம் கடைசியாகத் தற்போது தீர்மானித்திருக்கிறது.

—*—

# ஆர்ஸ்பதியில் ஆரம்பமான சற்பிரசாத மகாநாடு

பிரான்ஸிய தேசிய சற்பிரசாத மகாநாட்டின் ஆரம்பத்தை முன்னிட்டுக் கூரேதார்ஸ் என அறியப்படுகின்ற அர்ச். வியான்னி அருளப்பர் தொண்டாற்றிய ஆர்ஸ் என்ற சிறிய கிராமத்தில் அன்று பதினாயிரம் மக்களுக்கு மேல் குழுமியிருந்தார்கள். அர்ச். வியான்னி அருளப்பர் பரமபதமடைந்த நூறாம் ஆண்டிலே இந்த மகாநாடு நிகழும் காரணமாக ஆர்ஸ்பதி அதற்குத் தெரிவுசெய்யப்படலாயிற்று. லில்நகர் அதிமேற்றிராணியாரான கருதினால் லியேனட்ஆண்டவர் தலைமைதாங்கிய ஆரம்ப திருவைபவத்தின்போது அங்குள்ள பங்குக்கோவிலில் குருத்துவமாணவர் ஏழுபேர் குருத்துவாபிஷேகம் செய்யப்பெற்றனர். அதன்மேல் அண்மையிலுள்ளதும், 1881-ம் ஆண்டு பிரான்ஸிய முதலாவது சற்பிரசாத மகாநாடு நடைபெற்ற இடமுமாகிய லையன்ஸ்நகரில் இம்மகாநாடு தொடர்ந்து நடைபெறலாயிற்று. அதில் 25 மேற்றிராணிமார் கலந்துகொண்டார்கள்.

## ஆவணி மாதம்

**பொதுக்கருத்து:** திருச்சபையின் சமூகப்போதனையை உலகம்எங்கும் நாள்தோறும் அதிகம் பயனளிக்கும் வகையில் பரப்புவதற்காக வேண்டிக் கொள்வது.

**வேதபோதக கருத்து:** வேதபோதக நாடுகளில் தேவஅழைத்தல்கள் பெருகுவதானது பணத்தட்டுப்பாட்டினால் தடைப்படாதிருப்பதற்காக மன்றாடிக்கொள்வது.

சத்திய வேத

# பாதுகாவலன்

1959-ம் ஆண்டு
ஆவணிமாதம் 6-ந் திகதி

## கண்டிப் புதிய மேற்றிராணியார்

மகாவந். பேர்ணுட் றெஞ்ஞோ ஆண்டவர் அவர்களிடமாகக் கண்டிப் புதியமேற்றிராணியாராக மகாவண. தொம் லேயோ நாணயக்கார சுவாமியவர்கள் நியமனஞ்செய்யப் பெற்றிருக்கிறாரெனச் சென்றவாரம் எட்டிய சுபசெய்தியாலே அம்மேற்றிராசன குருப்பிரசாதிகளும், கத்தோலிக்கமக்களும் அடைந்துள்ள அணைகடந்தமகிழ்ச்சியோ பகருந்தரமன்று. இதுவரை கண்டிநகர் அர்ச். அந்தோனியார் கல்லூரியின் ஆரம்பகல்விப்பகுதித் தலைமைஆசிரியராய் இருந்து வந்து, அக்கல்லூரி ஆசிரியர்களாலும், மாணவர்களாலும் வெகுவாகநேசித்துச் சங்கிக்கப்பெற்றுவந்த சுவாமியவர்கள் புதியமேற்றிராணியாராக நியமனஞ்செய்யப் பெற்றுள்ளாரென்ற மனோகரசெய்தியாலே அவர்களெல்லாம் ஆனந்தசாகரத்தில் அமிழ்ந்தியவர்களாய் அவரைச்சந்தித்துச் சோபனவாழ்த்துகள் சமர்ப்பித்து அவரின்திருக்கர ஆசிபெற்று மகிழ்ந்தார்கள்.

தற்போது 43வயதுடையவரும், கீழ்த்தேசபாஷா வல்லுனருமான மகாவண. தொம் லேயோ நாணயக்கார சுவாமியவர்கள் நுகேகொடையிலே பகோடா எனும் இடத்தில் வசிப்பவர்களான ஜி. பி. நாணயக்கார தம்பதிகளின் சிரேஷ்டபுதல்வர். இளமையிலே இவர் மாத்தளையிலுள்ள சென் தோமஸ்கல்லூரியிலே கல்வி பயின்று பிந்தஅதில் ஓர்ஆசிரியராக நியமனம்பெற்று ஆசிரியத் தொண்டாற்றிவந்தார். பின்னர் அரசாங்க கிளேறிக்கல்சேவையில்அமர்ந்து கடமைபார்த்து வரும்போது தேவஅழைத்தலுக்குச் செவிசாய்த்து, 1941-ம் ஆண்டு தமது உத்தியோகபதவியை இராசினாமாச்செய்து அவ்வாண்டிலேயே மொன்ரேபாஞேவிலுள்ள ஆசீர்வாதப்பர்சபை நவசந்நியாசமடத்தில் பிரவேசித்துக் குருப்பட்டத்துக்குப்படித்து வந்தார். கண்டிப் பாப்பரசர் குருமடத்திலே யேசுசபையாரின் கீழும் வேதசாஸ்திரம் படித்து வந்து 1950-ம்ஆண்டு குருப்பட்டம்பெற்றதன்மேல் ஆசிரியராயும், கல்லூரிவிடுதிகளின் தலைமைப் பரிபாலனராகவும் பல்வேறுபதவிகள் வகித்திருந்து கடைசியாகக் கண்டிநகர் அர்ச். அந்தோனியார்கல்லூரியின் ஆரம்பகல்விப்பகுதித் தலைமை ஆசிரியராகக் கடந்த ஒன்பது ஆண்டுகளாகக் கடமைபார்த்து வரலாயினர்.

கண்டிப் புதியமேற்றிராணியாரின் நியமனத்தைக் கண்டி மேற்றிராசன கத்தோலிக்க மக்கள் மாத்திரமல்ல, பிறசமய மக்களுமே பலமாதங்களாக ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார்கள். ஏனெனில், இதுவரை கண்டிமேற்றிராணியாராயிருந்து சுகத்தாழ்வுகாரணமாகச் சென்றவருடம் தமதுபதவியை இராசினாமாச்செய்திருந்த மகாவந். றெஞ்ஞோ ஆண்டவர் அவர்கள் இலங்கைக் கத்தோலிக்க மக்களிடையே பெற்றிருந்த பெருமதிப்பையும், அவர்களெல்லாம் அவர்பால்கொண்டிருந்த பெரும் வணக்கபற்றுதலையும வர்ணித்து எழுதுவதோ இயலுந்தரமன்று. எவரோடும் ஓர்சாமானிய மனிதனைப்போலப் புழங்குவதிலே அவருக்குள்ள பெருந்தன்மையையும், அவரது அத்தியந்ததாழ்மையையும் பாராட்டிஎழுதுவதோ இயலாக்கருமமாகும்.

ஓர்கத்தோலிக்கர்அல்லாத கண்டி, திறினிற்றிக்கல்லூரிஅதிபர் சென்றவருடம் றெஞ்ஞோ ஆண்டவர்அவர்களுக்கு வழங்கிய பாராட்டுரை இன்னுமே நமது செவிகளில் தொனித்துக்கொண்டிருக்கிறது. அம்மட்டா! ஆயிரபதினாயிரக்கணக்கான கபடமற்ற இருதயங்களிலிருந்து- பிள்ளைகள் ஏழைகள், மற்றும் மலைநாட்டுத் தோட்டங்களில் வேலைசெய்யும் மக்களின் இருதயங்களிலிருந்து எழுகின்றபாராட்டுரைகளும், நன்றிஉணர்ச்சிகளும் இம்மட்டன்று. எல்லாவற்றிலும் மேலாக இலங்கையிலே செபமாலைப்படையணியின் பெரியதளகர்த்தரென அறியப்பெறுகிறவரும், செபமாலையாலே எத்தனையோ அருங்காரியங்களைச் சாதித்துள்ளவருமான ஆண்டவர்அவர்களிடமாக நியமனஞ்செய்யப் பெற்றிருக்கும் புதியமேற்றிராணியாரும் அவரதுஅடிச்சுவடுகளைப் பின்பற்றித் தம்மிடம்ஒப்படைக்கப் பெற்றிருக்கும் மேற்றிராசனத்தைச் சீராய்ச்சிறப்பாய், பேராய்ப்பெருமையாய் ஆட்சி செய்துவர எல்லாம்வல்லஇறைவன் திருவருள்பாலிப்பாராக!

---

### அப்போஸ்தலிக்க ஸ்தானுபதி

## ஆண்டகை அவர்கள்

பரிசுத்தபாப்பரசரின் அப்போஸ்தலிக்க ஸ்தானுபதியான மகாமேன்மைதங்கிய ஜேம்ஸ் ஆர். நொக்ஸ் ஆண்டகை அவர்கள் இலங்கைக்கு மூன்றாம்முறையாகச் சென்ற 30-ந் திகதி வியாழக்கிழமை விஜயஞ் செய்திருக்கின்றார். அவர் இம்மாதம் 7-ந் திகதியாகிய நாளை வெள்ளிக்கிழமைமுதல் அடுத்த 10-ந் திகதி திங்கட்கிழமைவரை கொழும்பிலே போறளையிலுள்ள அக்குயினஸ் சர்வகலாசாலைக் கல்லூரியில் இலங்கையிலுள்ள சந்நியாச சபைகள், கூட்டங்கள், மற்றும் ஸ்தாபனங்கள் ஒன்றுசேர்ந்து அளவளாவி ஆலோசித்துச் செயலாற்றுதற்கென நடாத்தப்படவிருக்கும் தேசீய ஆலோசனை மகாநாட்டின் கூட்டங்கள் ஒவ்வொன்றிலும் நேர்முகமாகத் தலைமை தாங்குமாறே வந்திருக்கின்றார்.

இம்மகாநாட்டிலே குருமாரும், பிறதர்மாரும், கன்னியாஸ்திரிமாருமாகச் சுமார் 800 பேர் கலந்து கொள்வார்களென்று சொல்லப்பட்டபோதிலும் இவர்களின்தொகை இன்னுமதிகமாகவே இருக்குமென நம்பப்படுகிறது. கிழக்கு நாடுகளிலே முதன்முதலாக நடைபெறவிருப்பதாகிய இந்தமகாநாடு நடத்தப்பட வேண்டுமென்ற கருத்தை முதன்முதலாகப் பிறப்பித்தவர் ஆண்டகை அவர்களேயெனத் தெரியவருகிறது. இலங்கையிலுள்ள சகல மேற்றிராணிமாரும் தங்கள் விக்கார் ஜெனறல்களுடன் இதற்குச் சமூகமளிப்பார்கள்.

நிற்க, ஆண்டகை அவர்கள் இலங்கைக்கு விஜயஞ்செய்துள்ள இச்சந்தர்ப்பத்திலே சிலாபமேற்றிராசனத்தைச் சேர்ந்த மாறுவிலிலே பத்துலட்சம் ரூபாசெலவில் கட்டப்படவிருக்கின்ற கத்தோலிக்க ஆஸ்பத்திரிக்குச் சென்ற 2-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை அஸ்திபாரக்கல்லை ஆசீர்வதித்து நாட்டலாயினர். அத்தருணம் சிலாபமேற்றிராணியாரான மகாவந். எட்மன்ட் பீரிஸ் ஆண்டவர் பேசியபோது: அரசினர் ஆஸ்பத்திரிகளிலே தாதிகளாகக் கடமைபார்க்கின்ற கன்னியாஸ்திரிமார் தொடர்ந்து பணியாற்றுவதை அங்கீகரியாத அரசாங்கத்தின் கொள்கைகாரணமாக இந்தக் கன்னியாஸ்திரிமார் இந்நாட்டிலே அருமைபெருமை பாராட்டும்படியாக ஆற்றிவந்த சேவையிலிருந்து விலகவேண்டியோரானார்கள்; ஆயினும் அவர்களைப் பிரத்தியேக ஆஸ்பத்திரிகளில் வைத்துக்கொள்ள அரசாங்கம் தயவாக அனுமதித்துள்ளது; சிலாப மேற்றிராசனத்திலே ஒரு லட்சம் கத்தோலிக்க மக்களுககு மேல் இருக்கின்றார்கள்; இவர்கள் ஒவ்வொருவரும் குறைந்தபட்சம் ஆளுக்குப் பத்துரூபாகொடுத்தால ஒருநாளிலேயே பத்துலட்சம் ரூபாவையும் சேகரித்துவிட முடியும்; இம்மேற்றிராசனத்தின் மறுபகுதிகளிலே கிளை ஆஸ்பத்திரிகளைத் திறப்பதும் நமதுடைய கருத்தாகுமெனக் கூறிநின்றார். அஸ்திபாரக்கல் நாட்டும்வைபவத்தின்போது அப்போஸ்தலிக்க ஸ்தானுதிபதி ஆண்டகை அவர்களுக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்படலாயிற்று.

---

## கேரளஅரசாங்கத்தின் வீழ்கை

"கேரளத்துக்குப் போங்கள்! அப்போதுதான் கம்யூனிஸ்த ஆட்சியின்கீழ் மக்கள் உள்ளாயிருக்கும் கஷ்டங்களையும், சோதனைகளையும் உங்களால் அறிந்து கொள்ளமுடியும்; கம்யூனிஸ்த அரசாங்கம் தனதுஇரண்டரை வருடப் பதவிகாலத்திலும் மக்களுக்கு நன்மைசெய்வதற்குப்பதிலாகத் தனதுகட்சியின் நலனிலும், அதன்நிதிநிலைமையை உயர்த்துவதிலுமே கண்ணுங் கருத்துமாய் இருந்திருக்கிறது; கம்யூனிஸ்தர்களுக்கு ஒருநீதியும், ஏனையோருக்கு ஒருநீதியும் கடைப்பிடிக்கப் பட்டிருக்கிறது. கம்யூனிஸ்தர்கள் சட்டத்துக்கெலலாம் அப்பாற்பட்டவர்களாய் அங்குசலுகைகள்அனுபவிக்கிறார்கள்; ஏனையோருக்கு அரசியல்திட்டம்வழங்கிய சாதாரணஉரிமைகள்தானும் மறுக்கப்பட்டுள்ளன" என்று கம்யூனிஸ்த ஆட்சி நடைபெற்றுவந்த கேரள நாட்டினை நேர்முகமாகவந்து தரிசித்துப்போன இந்தியகாங்கிரஸ்தலைவர்களும், மற்றும்ஜனநாயகவாதிகளும் இட்டபெருங் கூச்சல் கடைசியாக இந்தியமத்தியஅரசாங்கத்தின் செவியில் விழுந்தது. கேரளவிஷயத்தில் தலையிட்டது. பிரதமர்நேருஅவர்களது சிபாரிசின்பேரிலே கேரளத்தில் ஜனாதிபதி ஆட்சி ஏற்பட்டுவிட்டது. இதுபற்றியசெய்தியொன்று டில்லியிலிருந்து ஓர் விசேஷதூதுவர்மூலம் கேரள கவர்னர் இராமகிருஷ்ண ராவ் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அவர் கேரளமுதன் மந்திரி நம்பூதிரிபாத்தையும், அவரின்சகமந்திரிகளையும் ஓர் தேநீர்விருந்துக்கு அழைத்து, அவர்களுக்கு இச்சுபசெய்தியைத்தெரிவித்து வழியனுப்பி வைத்தார். அதனால் கேரளாவில் கம்யூனிஸ்தஆட்சி விழுந்தது. அதன்முதன்மந்திரி நம்பூதிரிபாத் வீழ்ந்தார். அங்கேவேண்டப்படாத கம்யூனிஸ்த கல்விச் சட்டத்தைக்கொண்டுவந்து, நாட்டின்கல்வியைப் பாழாக்கிவிடமுனைந்து, கம்யூனிஸ்தஆட்சியையே குழிதோண்டிப் புதைத்துவிட்டிருக்கும் கல்விமந்திரி முண்டசேரியும் வீழ்ந்துமண் கௌவினர். கேரளசட்டசபை கலைக்கப்பட்டு, அங்கு கவர்னரின் ஆட்சி தொடங்கியிருக்கிறது. எதிர்க்கட்சிகளின் தலைவர்களும் தங்கள் எதிர்ப்புக்கிளர்ச்சிகளை நிறுத்திவிட்டிருக்கிறார்கள். மத்தியஅரசாங்கத்தின் தலையீட்டைக் கேரள கம்யூனிஸ்த அரசாங்கமுமே விரும்பியதாகவும், எதிர்ப்புப் பலமாகவிருப்பதாலே அரசாங்கநிர்வாகம் ஸ்தம்பிக்க வேண்டியநிலை ஏற்பட்டுவிட்டதாகக் கேரளஅரசாங்கமே தெரிவித்ததாகவும் பிரதமநேரு சென்றசனிக்கிழமை டில்லியில் கூறியிருப்பதும் ஈண்டு குறிப்பிடற்பாலதாகும். கேரளகம்யூனிஸ்தஅரசாங்கம் வீழ்ந்தமையாலே அதனை ஓர் கேந்திரதானமாகக்கொண்டு இந்தியாவைக் கம்யூனிஸ்த ஆதிக்கத்தில் கொண்டுவந்துவிடுமாறு இந்திய கம்யூனிஸ்தகட்சி இட்டிருந்த திட்டம் நிலைகுலைந்தது.

---

### ஆசிரியர்களின்

## ஞானவொடுக்கம்

வருகிற ஆவணிமாதம் 26-ந் திகதி புதன்கிழமை பின்னேரந் தொடக்கம் 30-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலைவரைக்கும் கொழும்புத்துறைத் தாபனத்தில் ஆசிரியர்களின் ஞானவொடுக்கம் நடைபெறும்.

இந்த ஞானவொடுக்கத்தில் பங்குபற்ற விரும்பும் ஆசிரியர்கள் நமக்குக் கூடிய சீக்கிரம் அறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

PHILIP PONNIAH,
Gen. Manager, R. C. Schools
Jaffna, 27-7-59

# சுதேச வர்த்தமானம்

## பனிமயமாதா திருநாள்

இலங்கையில்வாழும் பரதகுலமக்கள் பரிசுத்தபனிமயமாதா திருநாளை இம்மாதம்9-ந்திகதியாகிய வருகிற ஞாயிற்றுக்கிழமை வழமைபோலக் கொழும்பிலே புறக்கோட்டையிலுள்ள சம்பிலிப்புகேரியார்கோவிலில் கொண்டாடவிருக்கின்றார்கள். தற்போது நடைபெற்றுவரும் நவநாள்உற்சவத்திலே வண ஜேக்கப் பர்ணாந்துசுவாமியவர்கள் தினமும்தமிழில் பிரசங்கஞ் செய்து வருகின்றார். திருநாளன்று காலை9மணிக்குப் பெரியபாடற்பூசையும், மாலை6மணிக்குப் பனிமயமாதாவின் திருச்சுரூபசுற்றுப்பிரகாரமும் நடைபெற்று, அதன்மேல் அத்திருத்தாயாருக்குக் குடும்பங்கள் ஒப்புக்கொடுக்கும் வைபவம்நடந்தேறும்.

## முதற்பரிசுபெற்ற தமிழ்ப்பெண்மணி

காலிஜிம்கானுசுவீப்பிலே இம்முறை பதுளையைச்சேர்ந்த குறெண்டவத்தையில் வசிக்கின்ற திருமதி எம். எக்ஸ் ஜெகராஜ் லீமேயான் என்ற 36வயதுடைய தமிழ்ப்பெண்மணி முதற்பரிசாக 1லட்சத்து 4ஆயிரத்து 875ரூபா 76சதம் பெற்றிருக்கிறார். இவர் தனக்குப்பரிசாகக் கிடைத்தபணத்திலே பதினாயிரம்ரூபாவைத் தற்போது கட்டியெழுப்பப்படுகின்ற பதுளை, அர்ச். மரியநாயகியின்கோவில் கட்டடநிதிக்கு வழங்கவிருப்பதாகத் தெரிவித்திருக்கின்றார். இதுவிஷயமாய் அவர் பேசியபோது: கோவில்கட்டடநிதிக்குச் சொற்பபணம் தரவேண்டுமென்று வண. டி. பி. பரிஞசுவாமியார் என்னிடம்கேட்டபோது, நான் சுவீப்டிக்கெற் எடுத்திருக்கிறேன்; ஏதும்பரிசுவிழுந்தால் கணிசமானதொகை கட்டடநிதிக்கு அளிப்பேனென்று அவரிடம் கூறினேன்; பதுளை அர்ச். மரியநாயகிகோவில் புதியகட்டடம் அமைக்கப்படுவதில் நான் மிகுந்த அக்கறை கொண்டுள்ளேன்; இந்தக்கட்டடநிதிக்கு நான் பதினாயிரம்ரூபா வழங்கவிருக்கிறேன்; எனது பிள்ளைகளை நன்றாகப்படிக்கவைக்கவும், என் உறவினருக்கு உதவிசெய்யவுமாக இந்தப் பணத்தில் ஒருபகுதியைச் செலவிட்டு, மீதியைப் பிள்ளைகளின் நலனுக்காகப் பாதுகாத்துவைப்பேன் எனக்கூறலாயினார். இவரின்கணவரான திரு. எஸ். எக்ஸ். ஜெகரூஸ் லீமேயான்என்பவர் பதுளையிலே ஷெல்கம்பெனிபெற்றோல் மேற்பார்வையாளராய் இருந்துவருகிறார்.

## இருமுத்துக்குளிப்புகள்

அடுத்துநிகழும் 1960-ம்ஆண்டிலும், அடுத்த1961-மஆண்டிலும் மன்னார்க் கரைக்கு அப்பாலுள்ளகடலிலே இருமுத்துக்குளிப்புகள் நடத்தக் கடற்தொழில்பகுதி திட்டமிட்டுவருகின்றது. முன்னில்லாத மிகப்பெரியனவான இந்தமுத்துக்குளிப்புகள் இரண்டிலும் குளிப்பதற்குப்பக்குவமான சிப்பிகள் ஐந்துகோடிவரை இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. முதலாவதுமுத்துக்குளிப்பில் 2கோடியே 0 லட்சமசிப்பிகளும், இரண்டாவது குளிப்பில் மீதியானசிப்பிகளும் குளிக்கப்படவிருக்கின்றன. சென்ற1958-ம் ஆண்டின் முத்துக்குளிப்பில் சுமார்50 லட்சம்சிப்பிகளே குளிக்கப்பட்டன. அடுத்தவருடத்திலே குளிப்பதற்குப் பக்குவமாயிருக்கக்கூடிய மிகப்பெருந்தொகையான முத்துச்சிப்பிகள் அங்கு கடற்படுக்கையில் இருப்பதாகச் சமீபத்தில்ஆராய்ந்து கண்டறியப்பட்டுள்ளது. 1960-ம், 61-ம்ஆண்டுகளிலே முத்துக்குளிப்பு நடத்துவதுசம்பந்தமாய் ஐந்துகோடி முத்துச்சிப்பிகளை கடலிலிருந்து குளிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் உலகெங்குமிருந்து கோரப்படுகிறதெனத் தெரியவருகிறது.

## கவர்னர்—ஜெனறலின்பதவிகாலம்

கவர்னர்—ஜெனறல் சேர் ஒலிவர் குணதிலகா அவர்களின் பதவிகாலத்தை மேலும்நீடிக்கச்செய்யும்படியாய் மகாராணிக்குப் பிரதமர் ஆலோசனை கூற வேண்டுமென்று லங்கா சமாஜவாதிப் பிக்குகள்பெரமுனை பெரும்பான்மை வாக்குகளால் தீர்மானித்திருக்கிறது. நாட்டின் நன்மையை மனத்திற்கொண்டுதான் இத்தீர்மானஞ்செய்யப்பட்டதென அப்பெரமுனைக் காரியதரிசியான தேரோ தெரிவித்திருக்கின்றார்.

## தமிழ்ச்சர்வகலாசாலை

திரிகோணமலையிலே தமிழ்ச் சர்வகலாசாலைக்கு அத்திபாரம் இடப்பட்டிருக்கும் இடத்திலே 13லட்சம்ரூபா செலவில் மூன்றுவிஞ்ஞானகலைக்கூடங்களை முதலில் அமைப்பதென்றும், ஏனையகட்டடங்களைப் பின்னர் படிப்படியாக அமைப்பதென்றும் சென்றசனிக்கிழமை நடைபெற்ற தமிழ்ச்சர்வகலாசாலைப் பொதுக்கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. கட்டடநிதிக்கென "வீரகேசரி"மூலம் பத்துலட்சம்ரூபா நிதிஒன்றை ஆரம்பிக்கவேண்டுமென்றும், இதற்கு அப்பத்திரிகையின் ஆதரவையும், ஒத்துழைப்பையும் நாடவேண்டுமென்றும் பொதுச்சபை தீர்மானித்துள்ளது.

## அர்ச். கூரேதார்ஸின் நூற்றாண்டுவிழா

கட்டளைக் குருமாரின் பாதுகாவலரும், ஆர்ஸ்எனும் கிராமத்தின் கட்டளைக்குரவராக விளங்கியிருந்தவரும், கூரேதார்ஸ் என்னும் செல்லப் பெயரால் எங்கும்பிரஸ்தாபமாக அறியப்படுகிறவருமான அர்ச் வியான்னி அருளப்பர் பரமபதம் அடைந்த நூறும் ஆண்டுவிழாவைக் கத்தோலிக்கஉலகம் முழுவதும இவ்வாரத்திலேகொண்டாடுகின்றது. வழமையிலே ஆவணிமாதம் 9-ந் திகதியன்று கொண்டாடப்பட்டுவரும் அவருடையதிருநாள் இம்முறை ஞாயிற்றுக்கிழமையில் வருவதால் அதனை இம்மாதம 8-ந் திகதியாகிய நாளை நின்றுவரும் சனிக்கிழமைக்குப் பரிசுத்தபாப்பாசர் மாற்றியிருக்கின்றார்.

## கள்ளக்குடியேற்றகாரர்

சென்ற1-ந்திகதிசனிக்கிழமை காலை 3மணியளவில் காரைநகரிலிருந்து கள்ளக்குடியேற்றகாரரை ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணத்தைநோக்கி வந்த இரண்டுகார்களை நிறுத்தும்படியாகப் பொலிசர் துப்பாக்கிப் பிரயோகஞ்செய்தும் அவைகள்தப்பிவிட்டன. ஆயினும்அவர்கள் மற்றும்மூன்றுகார்களைக் கைப்பற்றியதோடு கள்ளக்குடியேற்றகாரர்15பேரும்,கார்ச்சாரதிகள், கிளீனர்கள் 7பேருமாக 22பேரைக் கைதுசெய்தனர். எல்லாமாக ஐந்து கார்களை நிறுத்துமாறு பொலிசர் உத்தரவிட்டபொழுது இரண்டுகார்கள் விரைவாகச் செல்லவே அவற்றின்மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது. அதன்மேல் சிலநிமிஷங்களின்பின் இருகார்களிலும்ஒன்று வீதியில்தலைகீழாகப் புரண்டுகிடக்கக் காணப்பட்டது. ஆனால், அதில் எவருமேஇருக்கவில்லை. தப்பியோடியதும், கள்ளக்குடியேற்றகாரரைஏற்றிச்சென்றதென நம்பப்படுவதுமான மற்றக்காரைச் சாவகச்சேரிப்பொலிசர் கைப்பற்றினர். அதன் சாரதி, சொந்தக்கார் ஆகிய இருவரும் காவலில்வைக்கப் பட்டிருக்கின்றனர். அன்று, கள்ளக்குடியேற்றகாரரெனச் சந்தேகிக்கப்படும் வேறு 30பேரையும் கடற்படையினர் கோவளத்திலிருந்து இரண்டுமைலுக்கப்பால் கைதுசெய்தார்கள்.

## மஸ்கோ நகரிலே நிகழ்ந்தது

சோவியற்ருஷியாவின் தலைப் பட்டணமாகிய மஸ்கோநகரிலே சமீபத்தில் கத்தோலிக்க தம்பதிகள்இருவர் திவ்விய பூசையுடன் சம்பிரதாயமுறைப்படி திருமணம் நிறைவேற்றப்பெற்றுப் பாப்பரசரின் ஆசியையும் பெற்றுக்கொண்டனர். இருவரும் அமெரிக்கர். மணமகள் ஐக்கிய அமெரிக்கதேச ரெனுபிளை எனுமிடத்தைச்சேர்ந்த மேரி லூயிஸ் மைக்மாஹன். மணமகன் அத்தேசயேல்நகர சட்டகலாசாலைப் பட்டதாரியும், இருதேசங்களிலும் மாணவர்களை மாற்றிக் கல்விபயிற்றும்திட்டத்தின் விளைவாகக் கடந்த ஓராண்டாக மஸ்கோ சர்வகலாசாலையில் பயின்றுவருகிறவருமான டெனிஸ் மைக்கேல் ஓ' கொனர். திருமணம் அந்நகரிலே பிரான்ஸுக்குரிய அர்ச். லூயிஸின் கோவிலில் நிறைவேறியது. பங்குக்குரவர் வண விற்ரேல்ட் புரேணிற்ஸ்கி சுவாமியார் அதை நிறைவேற்றிவைத்தார். அதன்மேல் தம்பதிகள் இருவரும் அந்நகரிலுள்ள அமெரிக்க கலனியின் விசாரணைக்குரவரான வண. லொண்ட்டியொற் சுவாமியாரால் அவரது சிற்றாலயத்தில் நிறைவேறிய திருமணப்பூசைக்குச் சமூகமாயினர். பூசைமுடிவிலே சுவாமியார் பரிசுத்தபிதாவின் ஆசியைத் தெரிவித்துக் கருதினல் ரார்டினி ஆண்டவர் அனுப்பிய தந்திச்செய்தியை வாசித்தார். திருமணம் நிறைவேறியபோது விருத்தாப்பியரான மஸ்கோநகர மக்கள் அர்ச். லூயிஸின் கோவிலுக்குச் சமீபமான நடைபாதைகளில் நின்று காட்சி பார்த்தார்கள். அப்போது வயதில்மூத்த ஓர் மாது, "எத்தனை அழகு! எவ்வளவுஅழகு! இது முன்னர் நடந்தது போலத்தானே!" என்று உரத்துக்கூறினாள். அரசியற் புரட்சிக்கு முந்திய ருஷியாவைப் பற்றிநினைத்தே அவ்விதம்அவள் கூறினாள்.

## வரவுசெலவுத்திட்டம்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்தின் முதலாவது வரவுசெலவுத்திட்டம சனப்பிரதிநிதிகள்சபையிலே 61 மணித்தியாலம் நீடித்துநடைபெற்ற விவாதத்தின்பின் சென்றவியாழக்கிழமை இரவு2-50மணிக்கு இரண்டாம்முறையாக அரங்கேறியது. அதற்குச்சாதகமாக 49அங்கத்தவர்களும், பாதகமாக 41 அங்கத்தவர்களும வாக்களித்தார்கள். அதனால் அதிகப்படியான எட்டுவாக்குகளாலே அரசாங்கம் வெற்றியடையலாயிற்று.

## பம்பாய் சென்றகப்பல்

ஓர்ஜப்பானிய கப்பல்கம்பெனியைச் சேர்ந்த எம். எஸ். ஹிரோஹான்மாறு எனும்கப்பல் பீனாங்கிலிருந்து வரும் வழியிலே கொழும்புத்துறைமுகத்தில் ஏற்பட்டுள்ள இடநெருக்கடி காரணமாக இங்குவராது நேரே பம்பாய் போய்ச்சேர்ந்துவிட்டது. இந்தக்கப்பலிலே ஜப்பானிலிருந்து இலங்கைக்கென ஏற்றிவந்துள்ள சுமார்300தொன் சரக்குகளும், 140தபால்பைகளும் பம்பாயில்இறக்கப்பட்டு மற்றோர்கப்பலிலே இலங்கைக்கு அனுப்பிவைக்கப்படவிருக்கின்றன.

## பரீஸ்மாநகரின் திருசேத்திரங்கள்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தான் 1830-ம்ஆண்டு பரிசுத்த தேவதாயார் ஓர்இளங்கன்னியாஸ்திரியான அர்ச். கத்தறீன் லபுறேக்குப் பன்முறை தரிசனையளிக்கலானார். இச்சிற்றாலயம் அன்னையின் சொந்தவர்ணங்களான நீலமும், வெள்ளையும் கொண்டு மிருதுவாயும், மனத்துக்குஇதமாயும் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. இதன் பெரிய பலிபீடத்துக்குமேல் இருந்துவரும் தேவதாயாரின் பெரியசுரூபம் அர்ச். கத்தறீன் லபுறேஅம்மாளுக்குக் காட்சியளித்த அதே சாயலையுடையதாய்க் காட்சியளித்த அதேஇடத்தில் இருக்கின்றது. இங்கு நின்றுகொண்டே பரலோகஇராக்கினி அவளை நோக்கி, "இந்தப்பலிபீடத்தின் அடிக்கு வாஎன்று பகர்ந்தார்.

### வின்சென்ற் டீ போலின்இருதயம்

இடதுபுறமாகவுள்ள பக்கப் பலிபீடத்தின்மேல் அர்ச். வின்சென்ற் டீபோலுடன் தொண்டாற்றிய புண்ணியசிமாட்டியான அர்ச். லூயிஸ் தே மறில்லக்அம்மாளின் புனிதஉடலைக்கொண்ட பளிங்குச் சேத்திரம் இருக்கின்றது. அவரதுகட்டளையின் பேரிலேயே இந்தச்சிமாட்டி பிறர்சிநேக கன்னியர்சபையை அடியிட்டாள். எதிர்ப்புறத்திலே ஓர் கண்ணாடிப் பலிபீடசேத்திரம் அர்ச். கத்தறீன் லபுறேஅம்மாளின் புனிதஉடலை— அவள் தனதுகன்னிகாஉடை தரித்தபடியே—கொண்டிருக்கின்றது. பலிபீடத்தின்மேலாக அர்ச். வின்சென்ற் டீபோலின் புனித இருதயத்தைக்கொண்ட— தேவசிநேகத்தினால் பற்றியெரிந்த புனிதஇருதயத்தைக்கொண்ட சிமிழ்இருக்கின்றது. இதற்குச் சமீபமாகவே 1830-ம் ஆண்டு 8-ந்திகதியன்று தேவதாயார் வீற்றிருந்த ஆசனம்இருக்கின்றது.

(தொடரும்)

---

● இந்தியாவிலுள்ள பதினைந்து இராச்சியங்களில் மிகப்பெரியது பம்பாய் இராச்சியம். இது 1லட்சத்து 90ஆயிரத்து 919மைல் விஸ்தீரணமுடையது. இந்தியாவிலே சனத்தொகையாலகூடிய இராச்சியம் உத்திரப்பிரதேசஇராச்சியம். இதில 6கோடியே 32லட்சத்து 15ஆயிரத்து 714மக்கள் வசிக்கின்றார்கள்.

● பாத்திமாதிருசேத்திரத்திலே சென்ற1958-ம்ஆண்டு பதினாயிரம் திவ்வியபூசைகளும் 720திருமணங்களும் நிறைவேறியதாகவும், 104குழந்தைகள் ஞானஸ்நானம் அருளப்பெற்றதாகவும், 2லட்சத்து 89ஆயிரம் நற்கருணைகள் வழங்கப்பெற்றதாகவும் அறிக்கைவெளியாயிருக்கிறது.

## இலங்கையிலிருந்து குடிபோனவர்கள்

இலங்கையிலிருந்து சென்ற1958-ம் ஆண்டிலே வளர்ந்தவர்களாய் 203 பேரும், பிள்ளைகளாய் 116 பேரும் ஆஸ்திரேலியா, கனடா ஐக்கிய அமெரிக்கதேசமாகிய நாடுகளில் போய்க் குடியேறியிருக்கின்றனர். இவர்களில ஆஸ்திரேலியாவுக்கு 157 வளர்ந்தவர்களும், 93பிள்ளைகளும், கனடாவுக்கு 33வளர்ந்தவர்களும், 17பிள்ளைகளும், ஐக்கிய அமெரிக்க தேசத்துக்கு 18வளர்ந்தவர்களும், 6பிள்ளைகளும் சென்றுள்ளார்கள்.

# அங்கும் இங்கும்

"வகுப்புவாதம் நாட்டுப்பற்றைக் கெடுத்துவிட்டது. சமயப்பூசல்களும் தலைதூக்கியுள்ளன. எல்லாநாடுகளும் சமூகஒற்றுமைக்காகப் பாடுபடுகையில் அரசாங்கம் வகுப்புவாதப் பூசல்களைக் கிளப்பிவிட்டுக்கொண்டிருப்பது வருந்தத்தக்கது."

**திரு. வீ. ஏ. கந்தையா,**
ஊர்காவற்றுறை எம். பி.

## சவக்காலை ஆட்சியாக மாறுமாம்

"வாழ்க்கைச்செலவைக் குறைப்பதற்கும், எல்லா வேலைநிறுத்தங்களுக்கும் ஓர்முற்றுப்புள்ளி காண்பதற்கும் அரசாங்கம் நேரகாலத்துடன் நடவடிக்கைகள் எடுக்காதிருந்தால் அது இந்த நாட்டில் உயிர்வாழும் மக்களை ஆட்சிசெய்வதாய் இருப்பதிலும், ஓர் சவக்காலையிலே இறந்துகிடப்பவர்களை ஆட்சிசெய்வதாய் விரைவிலே மாறிவிடும்."

**திரு. மஹானம சமரவீர,**
மாத்தளை எம். பி.

## எங்கு நோக்கினும் சோககீதம்

"எமதுநாட்டின் சரித்திரத்திலேயே மிகமுக்கியமான ஓர்கட்டத்தில் நாம் வாழ்கிறோம். பண்டாரநாயகா அரசாங்கத்தின்கீழ் நாட்டுமக்கள் எல்லோரும் அல்லோலகல்லோலப் படுகிறார்கள். எங்குநோக்கினாலும் சோககீதம் தான் காதில் விழுகிறது. சமுதாயத்தின் எப்பகுதியிலும் துன்பமும், துயரமுமே தாண்டவமாடுகின்றன. அங்ஙனமாக, இப்பொழுது மிகவும்அபாயகரமான புதியதோர் சர்வாதிகாரத்தைப் பண்டாரநாயகா புகுத்துகின்றார். கம்யூனிஸ்தர்களின் தோழமையுடன் நடக்கின்றசதி இதுவாகும்."

**திரு. டட்லி சேனநாயகா,**
முன்னைநாள் பிரதமர்.

## பெண்மணிகளும் பொருளாதாரமும்

"தலைசிறந்த நாகரீகப் பண்புகளைப் பாரம்பரிய சொத்தாகக் கொண்டுள்ள நமக்கு அந்நியரின்நாகரீகம் அறவே கூடாது. அந்த நாகரீகத்தில் மோகங் கொள்வதும், அதை வாழ்க்கையில் கடைப்பிடிப்பதும் தமிழ்ப் பண்பாட்டுக்கு உகந்தனவல்ல. பெண்களின் முயற்சியில்தான் சமூகத்தின் வளர்ச்சி பெரும்பாலும் தங்கியிருக்கிறது. பொதுவாகப் பெண்மணிகள் தங்கள் சங்கங்களின்மூலம் குடிசைக்கைத் தொழில்களில் ஈடுபடுவதால் சமூக வளர்ச்சிக்கு முக்கியஅம்சமான பொருளாதாரவிருத்திக்கு உதவிசெய்கிறவர்களாய் இருப்பார்கள்."

**திருமதி எம். ஸ்ரீகந்தா,**
யாழ்ப்பாண அரசாங்கஅதிபரின் பாரியார்.

## பாண்டித்தியம் பெறவேண்டும்

"ஆங்கிலத்தைக்கற்பதில் சகலமாணவர்களும் ஆர்வம் செலுத்தவேண்டும். அவர்கள் இவ்விஷயமாய்ப் பாடசாலையைமட்டும் நம்பியிருக்கக் கூடாது. வீட்டிலும் பெற்றார் ஆங்கிலம் கற்கப் பிள்ளைகளுக்கு ஊக்கமளிக்கவேண்டும். ஆங்கிலத்தில் சிறந்த அறிவு பெறுவது முக்கியமாகும். ஆங்கிலம் பேசத் தெரிந்தால்மட்டும் போதாது. வாசிக்கவும் தெரியவேண்டும். 8-ம் வகுப்பில் படிக்கும்மாணவன் எந்த ஆங்கிலப்புத்தகத்தையும் வாசிக்கத்தக்கவனாய் இருக்கவேண்டும். பெற்றார் மலிவான ஆங்கில புத்தகங்களை வாங்கிப் பிள்ளைகளுக்கு வீட்டில் படிக்கக் கொடுக்க வேண்டும். ஆங்கிலத்தில்தான் அறிவுச்செல்வங்கள் மலிந்து கிடக்கின்றன. மாணவன் உலக அறிவைப் பெறுவது ஆங்கிலத்தில் அல்லாது வேறெந்த வழியிலும் சாத்தியமில்லை."

**திரு. என். எவ். டி சில்வா,**
**வித்தியாதிபதி**

## தேர்தல் சூழ்ச்சியா?

"உதவிப் பணம்பெறும் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்று நடத்த வேண்டுமென்ற கூச்சலானது எதிர்க்கட்சியைச்சேர்ந்த ஒருசிலரின் தேர்தல் சூழ்ச்சியேயாகும். பொதுத் தேர்தல் நெருங்கிக்கொண்டுவருவதால் சனங்கள் முன்பாக ஏதோ ஒன்றைத் தாங்கள் எடுத்துக்காட்ட வேண்டிய தன் ஆவசியகத்தை அவர்கள் உணர்ந்திருக்கின்றார்கள்."

**திரு. எம். பி. டி சொய்சா,**
தொழில் மந்திரி.

## புத்தசமயத்தின் புதியஇரட்சகன்

"திரு. பிலிப் குணவர்த்தனவைப் பற்றிச் சாவதானமாயிருக்கும்படியாக நான் புத்தர்களை எச்சரிக்கின்றேன. அவர் 'புத்தசமயத்தின் புதியஇரட்சகன்.' புத்தர்களை ஏமாற்றும் நோக்கத்துடன் கத்தோலிக்கதிருச்சபையை எதிர்த்துப் போராடுகின்றார். அவர் புத்தர்களுக்குமாறாக வேலை செய்வாராதலினால அவரை அரசியல் அதிகாரத்துக்குத் தெரிந்தனுப்ப வேண்டாமென்று புத்தர்களுக்கு நான் விண்ணப்பித்துக்கொள்ளுகிறேன். இந்த மாக்ஸிய தலைவரையிட்டுப் புத்தர்கள் சாவதானமாய் இருக்கவேண்டும். இந்தநாட்டிலே பெரும்பான்மையினராய் இருந்துவரும் புத்தர்களின் உள்ளங்களைத் தன்வசப்படுத்திக் கொள்ளுமாறு அவர் கத்தோலிக்கதிருச்சபையைத் தாக்கத்தொடங்கியிருக்கின்றார். அவர் ஒரு உண்மையான கம்யூனிஸ்தர் என்பதைக் கொள்கையளவிலே நாடு ஒப்புக்கொண்டுள்ளது. ஆனால், தான் ஓர் சோஷலிஸ்தரென்று நாட்டிற்குக் காண்பிக்கத் தெண்டிக்கின்றார். பாமரமக்களை ஏமாற்றுவதற்கே அவர் முயன்றுவருகிறார்."

**கனம். தலாலே தம்மலோக நாயக தேரோ,**
சிங்கள தேசிய காங்கிரஸின் பொதுக் காரியதரிசி.

## சுதந்திரத்தை அழித்தவர்கள்

"இன்று அரசியல்வாதிகள் சுதந்திரத்தைப்பற்றிப் பேசிக்கொண்டு வந்தபோதிலும் அவர்கள்தான் சுதந்திரத்தை அழித்தவர்கள். கடந்த காலங்களிலே நமது முற்சந்ததியார் அனுபவித்த சுதந்திரம் இந்நாளில் தனிமனிதனுக்குக் கிடைப்பதாயில்லை. அரசாங்கம் எல்லாப்பாடசாலைகளையும்பொறுப்பேற்றுத் தங்கள் பிள்ளைகள் படிக்க வேண்டுமென்று பெற்றார்விரும்புவதை அல்ல, ஆனால், தான்விரும்புவதையே மாணவர்கள் படிக்கவைக்க முயன்றுவருகின்றது. தங்கள் பிள்ளைகளுக்கு உபயோகப்படக்கூடிய கல்வியை ஊட்டுவது பெற்றோர் ஒவ்வொருவரினதும் கடமையாகும். கடந்தகாலங்களிலே பெற்றாரின் இஷ்டப்படியே பிள்ளைகள் பாடசாலைகளில் கல்விபயிற்றப்பட்டார்கள். அதனால் பிள்ளைகள் நன்மையடைந்தார்கள். இப்போதோ அரசாங்கத்தின் அதிகாரத்தின்கீழ் பெற்றாருக்குப் பேசிக்கொள்ள இடமில்லை. தாங்கள் விரும்பிய பாடசாலையையோ அல்லது ஆசிரியரையோ அவர்கள் தெரிந்துகொள்ள முடியாது. ஏனெனில், ஆசிரியர்கள் கொண்டுநடத்தக் கூடியதைக்காட்டிலும் அதிகமான மாணவர்கள் பாடசாலைகளிலே இருக்கின்றார்கள். நாற்பது அன்றேல் அதற்குமேற்பட்ட மாணவர்களைக் கொண்ட வகுப்புஅறை ஒன்றிலே ஆசிரியர் மாணவர்களில் தனித்தனியே கரிசனை எடுத்துக்கொள்ள முடியாது. அதாவது முந்தியசந்ததியார் பெற்றுக் கொண்ட ஒருநன்மையை அவர்செய்து கொள்ளவியலாது."

**திரு. பி. ஏ. டி எஸ். செனரத்ன,**
குருநாகல் டிஸ்திறிக் நீதிபதி.

## மிஷனரிமாரின் பெருஞ்சேவை

"நாட்டுக்குப் பெருஞ்சேவை ஆற்றிக்கொண்டு வருகின்ற மிஷனரிமாரிலும், மற்றும் வெளிநாட்டு அந்நியசமயங்களைச் சேர்ந்தவர்களிலும் சனங்களில் அநேகர் குற்றஞ்சாட்டுகிறார்கள். காரணம் அதிகமானபிள்ளைகள் அவர்களின்பாடசாலைகளை ஆதரிப்பதே. ஏனெனில், அப் பாடசாலைகளிலே சேவை ஆற்றிவருகின்ற ஆசிரியர்கள் அவர்கள் மட்டிலே ஆழ்ந்தகரிசனை எடுக்கின்றார்கள்."

**திரு. ஏ. சிவசுந்தரம்,**
கிளிநொச்சிச் சைவ வித்தியாசங்க தலைவர்

## ஆங்கிலபாஷையின் அவசியம்

"ஆங்கிலம் ஓர் சர்வதேச மொழியாகும். வாழ்க்கையிலே வெற்றிபெற ஆங்கிலத்தை நன்கு கற்கவேண்டும். சிங்களம்மட்டும் தெரிந்தவர்கள் இலங்கைக்குவெளியே சென்றால் திண்டாடவேண்டும். தமிழ்அறிவுடன் இந்தியா போன்ற சிலநாடுகளில் சமாளிக்கலாம். ஆனால், ஆங்கிலமின்றி உலகத்தின் ஏனைய பகுதிகளில எதுவுமே செய்ய முடியாது. ஆகவே, ஆங்கிலத்தை நன்றாகக்கற்கவேண்டும். நான் புத்திகூறினாலும் நீங்கள் சிங்களத்தைக் கற்கமாட்டீர்களென நான் அறிவேன்."

**நீதியரசர்**
**என். சின்னத்தம்பி அவர்கள்**

"அரசாங்கத்தின் பத்தாண்டுத் திட்டம் வெற்றிபெறுமா என்பது சந்தேகாஸ்பதமானது. தமிழ்மக்களின் மொழியுரிமை பறிக்கப்பட்டிருக்கும் நிலையில் பத்தாண்டுத்திட்டத்தின் வெற்றிக்கு ஒத்துழைக்க வேண்டுமென்று நிதிமந்திரி தமிழ்மக்களைக் கேட்பதில் அர்த்தமேயில்லை. தமிழர்களின் பண்பாடு, கலை, கலாசாரம், அடிப்படை உரிமைகள் யாவற்றையும் நாசமாக்கும் அரசாங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்கப்படுகிறது. இந்தநிலையில் எப்படி ஒத்துழைப்பு ஏற்படும்? ஒத்துழைப்பை எப்படி உருவாக்குவது?"

**திரு. சி. வன்னியசிங்கம்,**
கோப்பாய், எம். பி.

## தமிழ்மக்களுக்கு எச்சரிக்கை

"தமிழர்களின் உரிமைகளை அவர்களுக்கு வழங்கும்விஷயமாய் ஒரு பெருந்தொகையான சிங்களமக்கள் கொண்டுள்ள கருத்துகளைப் பாராட்ட வேண்டியதன் அவசியத்தை அலட்சியஞ்செய்யாதிருக்குமாறு தமிழ்ப் பேசும்மக்களுக்கு விண்ணப்பஞ்செய்கிறேன். சிங்களவர்கள் எல்லோருமே விரோதிகளென்று நினைப்பதாகிய வளர்ந்துகொண்டுவரும் ஒருபோக்கு தமிழர்களிடையே இருக்கின்றது. இந்தஎண்ணம் தீயதுமாத்திரமல்ல, ஆபத்துக்கேதுவுமாகும். தமிழர்களின் நலனிலே அனுதாபங்கொண்டுள்ள சிங்களவர்கள் அநேகர்இருக்கின்றார்கள். சிங்களவர்கள் நல்லவர்கள், விருந்தோம்பும் குணமுள்ளவர்கள். ஆனால், அதிகாரவேட்கைகொண்ட ஒருசில அரசியல்வாதிகள் அவர்களைப் பிழையானவழியிலே நடத்துகிறார்கள். இந்த உண்மையைத் தமிழர்கள்உணர்ந்து தங்கள்சொற்களோ அன்றேல்செயல்களோ தங்களுக்கும், தாங்கள்ஊடாடும் சிங்களவர்களுக்குமிடையே விரோத உணர்ச்சிக்கு இடமேற்படாது கவனமாகப் புழங்கிக்கொள்ள வேண்டும். இந்தநாட்டிலுள்ள தமிழர்களிடையே பிளவை உண்டுபண்ணிவிடுமாறு முயன்றுவருகின்ற சிங்களவர்கள் சிலரின் இயக்கத்திலே எடுபட்டுப்போகாது கவனமாயிருக்கும்படி தமிழ்மக்களை எச்சரிக்கின்றேன்."

**திரு. சி. வன்னியசிங்கம்,**
கோப்பாய் எம். பி.

## நாடு சங்கதிகள்

● பிரித்தானியிலே "மனந்திரும்பியவர்களுக்குச சகாயஞ்செய்யும் சபை"யானது மனந்திருமபியபாதிரிமாருக்கும், அங்கிளிக்கன் கன்னியாஸ்திரிமாருக்கும் சென்ற 1958-ம் ஆண்டிலே 25,000 பவுணுக்குமேல் நன்கொடைகளாக உபகரித்திருக்கின்றது.

● பாப்பரசரது நேர்முகமான கட்டளையின்பேரிலே வத்திக்கானிலுள்ள பணியாளர்களெல்லாம் சென்ற ஆடிமாதமுதல் சம்பளஉயர்ச்சி பெற்றிருக்கின்றார்கள். குறைந்தசம்பளம் பெற்றசிலர் தங்கள்சம்பளம இருமடங்காக உயர்த்தப்பட்டிருக்கிறார்கள். பொதுவான இந்தச்சம்பளஉயர்ச்சியோடு தனிப்பட்ட, குடும்பபஞ்சப்படிகளும் கொடுபட்டிருக்கிறார்கள்.

● இந்தியாவிலே முன்னர் பாப்பரசரின் ஸ்தானிகராயிருந்து சுகத்தாழ்வு காரணமாகத் தமதுபதவியை இராசினாமாச்செய்த மாட்டீன் லூக்காஸ் அதிமேற்றிராணியார் இப்போது நல்ல சுகமடைந்திருப்பதால் பரிசுத்தஸ்தானம் அவரைத் தென்மார்க், நோர்வே, சுவீடன், பின்லாந்து, ஐஸ்லாந்து ஆதியனவற்றைஅடக்கிய ஸ்காண்டிநேவியநாடுகளின் அப்போஸ்தலிக்கதரிசராக நியமித்திருக்கிறது.

● லண்டன்நகரிலே மில்ஹில்என்னுமிடத்திலுள்ள அர்ச். சூசையப்பர் கலலூரியில் அன்றுஞாயிற்றுக்கிழமை கருதினல்கொட்பிறி ஆண்டவரால் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்ற 26குருத்துவமாணவர்களில் உலாந்த பிரதமரின் மருகரான வண. ஆர்னோல்ட் ஜேர்ஜென்ஸ்சுவாமியாரும் ஒருவராவர். இந்த26புதியகுருப்பிரசாதிகளுடன் மில்ஹில்மிஷனரிமாராய் மொத்தமாகத் 997பேர் இருக்கின்றார்கள்.

● பீற்றர் றிப்என்ற வானொலி விமர்ச்சகர்சமீபத்தில் 201 மணித்தியாலம் நித்திரைகொள்ளாதிருந்து உலகப்பிரசித்திபெற்றிருக்கின்றார். டக்றர்மாரின்மேற்பார்வையிலே இவ்வளவு நேரம் வேறெவருமே விழிப்பாயிருந்ததில்லையென்று விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். இளம்பிள்ளைவாதம் கண்டவர்களுக்கு உதவிசெய்கின்ற அமெரிக்கஸ்தாபனத்தைப் பிரஸ்தாபப்படுத்துமாறே அவர் இவ்வளவு நெடுநேரம் கண்ணுறங்காதிருந்தார்.

---

## அரசியல்வாதிகளின் குதிரைச்சவாரி

"இலங்கைபோன்ற ஒருநாட்டுக்கு அரசியலில் மத்தியபாதையே உகந்ததாகும். இன்று இலங்கை மிகமோசமான நிலையிலுள்ளது. எங்கு பார்த்தாலும் வேலைநிறுத்தங்களும், பரஸ்பரம்குரோதங்களும்தாண்டவமாடுகின்றன. அரசியல்வாதிகள் பொதுமக்கள் மீது 'குதிரைச்சவாரி' செய்கிறார்கள். அரசியல்வாதிகள் மதத்துவேஷம், வகுப்புத்துவேஷம், சாதித்துவேஷம், வர்க்கபேதங்களைக் கிளப்பிவிடுகிறார்கள். முதலாளித்துவமோ அல்லது மார்க்குஸமோஎன்று மேல்நாட்டு அரசியல் லட்சியங்களை இலங்கைமக்கள் குருட்டுத்தனமாகப் பின்பற்றுகிறார்கள் முதலாளித்துவம் இலங்கைக்குப் பொருத்தமானதன்று. கைத்தொழில்களில் மூலதனம்முடக்குவதற்கு இலங்கை பணம்படைத்த நாடன்று. முதலாளித்துவநாடுகளும இலங்கையில் மூலதனத்தைமுடக்க அஞ்சுகின்றன. கமயூனிஸமும், மார்க்குஸமும் நாட்டுக்குப் பொருத்தமல்ல. இவற்றைப் பின்பற்றினால் நாளடைவில் இலங்கை கம்யூனிஸ்த ஏகாதிபத்திய நாடுகளின் கைப்பொம்மையாக மாறிவிடும். சுதந்திரங்கள் நசுக்கப்பட்டுவிடும். இலங்கை முதலாளித்துவத்திலும், மார்க்குஸத்திலுமுள்ள சிறந்த அம்சங்களைமட்டும ஏற்று மத்திய பாதையில்செல்வதே சாலச்சிறந்தது."

**செனற்றர் ஜஸ்ரின் கொத்தலவலா**



# புனிதவீரர் பக்கம்



அருமைச் சகோதரங்களே!

இம்மாதம் ஒன்பதாம்நாள் அர்ச். அருளப்பர் வியான்னியுடைய திருநாள். **இவ்வாண்டு இப்புனிதர் மரித்து முதல் நூற்றாண்டு.**

யோண்மேரி பப்ரிஸ்ற் வியான்னி லியோன்ஸ்மாநகருக்கு அண்மையில் உள்ள டார்டில்லி எனும் கிராமத்திற் பிறந்தவர். பெற்றோர் ஏழைவிவசாயிகள்.

குருப்பட்டம் பெறவிரும்பினார். ஆனால், அப்பதவிக்குரிய கலைகளைப் பயிலுவதற்கு அவசியமான புத்திக்கூர்மை அற்றவராகக் காணப்பட்டார். அயராதஉழைப்பும், இறைவனின் அருளும் அவருக்கு உதவின. குருப்பட்டம்பெற்று மூன்றுஆண்டுகளின்பின் ஆர்ஸ் எனும் குக்கிராமத்தில் பங்குக்குருவராக நியமனம்பெற்றார்.

அவர் தம் வாழ்நாளைப்பூரணமாய்த் தேவஊழியத்தில் செலவழித்தார். பாவசங்கீர்த்தன ஆசனத்திலிருந்து அசடுபதிந்திருந்த ஆன்மாக்களுக்கு அனந்தநன்மை செய்தார். 1859-ம் ஆண்டு ஆவணி 4-ம்நாள் உயிர்நீத்தார்.

1905-ம்ஆண்டில் முத்திப்பேறுபட்டம்பெற்று இருபது ஆண்டுகளுக்குப்பின் சுத்தவாளர் நாமாவலியில் சேர்த்துக்கொள்ளப் பெற்றார்

அண்ணா.

—*—

## பங்குக்குருக்களில் மட்டி— இப்பொழுது பரம வழிகாட்டி

ஆர்ஸ் பங்கில் வந்துசேர்ந்ததும் யாருமறியாத அவ்விடம் உலகப்பிரசித்தி பெறும்என வியான்னி சுவாமியாரின் உள்ளத்தில் ஓர் எண்ணம் உதித்தது. அவரை அங்குஅனுப்பும்பொழுது "சிறியதோர் கஞ்சல் பங்கிற்கு உம்மை அனுப்புகிறேன்; அதை நல்லதுஆக்கவேண்டும்", என லியோன்ஸ். மேற்றிராசன விக்கார் ஜெனரல் கூறினர். அக்கிராமத்தை வந்து அடைந்ததும் "அதோ அச்சிறு குடிசைகள் தெரிகின்றனவே! இங்குவந்து குவியும் சனக்கும்பலை அவைகள் அடக்கமுடியாத ஒரு காலம்வரும்", என அவருடைய காவல்தூதன் கூறியிருக்கலாம். எவருமேகாத்திராத விதமாக இக்கூற்று உண்மையாகிவிட்டது.

முப்பதுஆண்டுகளாக மக்கள் அவருடைய பிரசங்கமேடையையும், பாவசங்கீர்த்தனஆசனத்தையும்முற்றுகையிட்டனர். யாத்திரிகர்கள் 80,000 ஆகினர், பொதுமக்கள் வாகனங்களில் வந்தோர்மட்டும் 120,000 பேர்களாயிருக்கலாமெனவும் கணிக்கப்படுகிறது.

வியான்னி சுவாமியை முதற்தடவை சந்தித்தவர்கள் ஏமாந்து மனங்கெட்டுப்போனார்கள். அவரை நன்கறிந்தவர்கள் அகத்தினழகு முகத்தில் இல்லையென்றனர். பரீசிலிருந்துவந்த பெண்ணொருத்தி "இவர்தானா ஆர்ஸ் பங்குச்சுவாமி?" எனஏளனத்துடன் சிரித்தாள். அதைக்கூர்ந்து கேட்டுக்கொண்டிருந்த எம் அர்ச்சியசிஷ்டர், "தென்னாட்டு சேபா இராணி குறைவாக எதிர்பார்த்தாள்; அம்மா, நீங்களோ மலைபோல எதிர்பார்த்துவிட்டீர்கள்," எனப் புன்னகையுடன் கூறினார்.

அவருடையதாழ்ச்சி எத்தன்மையதெனில் அவர்தம்மையே இகழ்வார். வேதசாஸ்திரம் படிக்க இளமைகடந்த முற்றியகாலத்தில் ஆரம்பித்ததும், கற்பதில் கண்டகடினமும் அவர்மனதைவிட்டகலவில்லையாகையின் இயல்பான திறமையற்றவர் என மக்கள்தம்மை மதிக்கச்செய்தார். அக்கிராமத்திலிருந்த மட்டி ஒருவனைச் சுட்டி, "செய்யவேண்டியது எல்லாம் அவன் செய்கிறான்; ஆனால், மற்றவர்கள்மத்தியில் அவனொரு மொக்கன். அவனைப்போலவே யானும் மற்றப்பங்குக் குருமார் சமூகத்தில்" எனக்கூறுவர். தேடி வரும் பக்தமகளிருக்குக் கூறியநகைச்சுவை நிறைந்தபதில் சில உண்டு. "சுவாமி, இங்குமூன்றுநாட்களாகக் காத்துக்கொண்டிருக்கிறேன்; உம்மைச் சந்தித்துப்பேச இன்னும் சந்தர்ப்பம் வாய்க்கவில்லையே" என்றாள்ஒருத்தி. "மறுமையிலே மகளே; மறுமையிலே சந்தித்துப் பேசுவோம்" என விடைபகர்ந்தார்.

வருபவர்களின் விண்ணப்ப விருப்பங்களும் அபூர்வம். சுத்தமான பண்டங்கள் சேகரிப்பவர் ஒருவர் சுவாமியாருடைய தலைமயிரில் கொஞ்சத்தைக் கள்ளமாக வெட்டிவிட்டார். "கடவுளுக்குத் துரோகமென விட்டுவிட்டேன்; அன்றேல் அவனுடைய செவிடு பறந்திருக்கும்" என்றார்.

வியான்னி சுவாமியாரிடம் பாவசங்கீர்த்தனஞ்செய்ய மக்கள்பல உபாயங்கள் செய்வர். அவருக்கு அண்மையில் செல்ல என்னஎன்ன சூழ்ச்சிகளைச் செய்தனரோ!

பாவசங்கீர்த்தனம் பண்ணவந்த ஒருவன் கடைசியாகத்தான் எத்தனை ஆண்டுகளுக்குமுன் சங்கீர்த்தனஞ் செய்தான் என மறந்துவிட்டிருந்தான். அவன்கூறிய தொகை பிழை எனச் சுவாமியார்கூறி, உண்மைத் தொகையைக்குறிப்பிட்டார். அவன் உடனே பென்சில் எடுத்து, சுவரில் கணக்குப் போட்டான். சுவாமியார் கூறியதொகை சரியென ஒப்புக்கொண்டான். போட்ட கணக்கை டுபூர் சுவாமியார் தாம் கண்டதாகக் கூறுகிறார். (வளரும்)

> "ஒற்றுமையீனம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."

## கூரைப் படிப்பு

ஜே. வி.

வெகுகாலத்திற்குமுன் சீனாதேசத்தில் ஒருசிறுவன் வாழ்ந்துவந்தான். அவனின்பெயர் கியாங்-பி. கியாங்கின் பெற்றோர்கள் பரமஏழைகள். மரத்தால் பாதரட்சைசெய்து விற்பதே தந்தையின் தொழிலாகும். ஆகவே, பகல்வேளைகளில் தந்தைக்கு உதவியாகக் கியாங்கின்வேலைசெய்து வந்தான். அன்றாட உணவிற்கே மிகவும் கஷ்டமாதலால் குடும்பத்தைச் சேர்ந்தயாவரும் ஒருமுகமாகத் தந்தைக்கு உதவிசெய்யவேண்டியிருந்தது.

தந்தை செய்துமுடித்த மரப் பாதரட்சைகளை மூட்டையாகக் கட்டிக்கொண்டு, விற்பதற்காகத் தினமும் அவைகளை ஊரினுள் தூக்கிக்கொண்டு திரிவான் கியாங். அவ்வாறு செல்லும்போது வழியில் குறுக்கிடும் பாடசாலையையும் காண்பான். அந்தப் பாடசாலையில் சேர்ந்து படிக்க அவனுக்கு எவ்வளவோ ஆசை. ஆனால், ஆசைமட்டும் இருந்தால் போதுமா? இயற்கையாகவே கியாங்கிற்குக் கூர்ந்த மதியிருந்தது. அவனுக்குமட்டும் அந்தப்பாடசாலையில் சேர்ந்து படிக்க வாய்ப்பிருக்குமானால், மற்றப் பிள்ளைகளைக்காட்டிலும் அறிவு படைத்தவனாக விளங்குவதோடல்லாமல் விரைவில் யாவையும் கற்றுக்கொண்டு, வெகு சுலபமாகவே பரீட்சைகளில் தேர்ந்துவிடலாம் என்று நினைத்தான்.

பகலில் செய்யவேண்டிய வேலைகளையெல்லாம் செய்து முடித்தபின்னர் படிக்கக் கற்றுக்கொண்டான். கியாங் மற்றப்பிள்ளைகளிடமிருந்து பாட புத்தகங்களை இரவலாகப் பெற்று, மாலை நேரங்களில் தனக்குப் பாடம் சொல்லிக் கொடுக்குமாறு ஆசிரியரை அணுகி வேண்டுவான். கருணையுள்ளம் படைத்த ஆசிரியரும் ஆர்வம்நிறைந்த சிறுவனுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்க இசைந்ததால் கியாங் படிக்கவும், எழுதவும்கற்றுக்கொள்ளமுடிந்தது.

ஆயினும், கியாங்குக்குத் துரிதமாகக் கற்றுக்கொள்வது கடினமாக இருந்தது. படிப்பதற்கு நேரமே இல்லை. பகல்பூராவும் வேலைசெய்வதற்கே சரியாக இருந்தது. ஆகவே, அவன் இரவு நேரங்களிற்றான் படிக்கமுடியும். ஆனால், வீட்டில் வெளிச்சம் தருவதற்காக எண்ணெயோ, மெழுகுவர்த்தியோ வாங்கக்கூடிய நிலையிலில்லை அவன் தந்தை. என்றாலும் மனமிருந்தால் மார்க்கமுண்டு அல்லவா? ஆகவே, நிலவொளியில் படிப்பதென்று முடிவு செய்தான் கியாங். அவன் புத்தகங்களோடு வெளியே சென்று எவ்வளவுநேரம் படிக்க முடியுமோ அவ்வளவு நேரம் படித்தான். நித்திரையைப்பற்றிய நினைவே இல்லாமல் படித்தான். அவனுக்கு வேண்டியதெல்லாம் படிப்பு.


சந்திரன் ஒளிகுன்றத் தொடங்கினால் ஒருபெரிய ஏணியைக் கொண்டுவந்து, வீட்டுக்கூரையை ஒட்டினாற்போல் அதைச் சாற்றிவைப்பான். வெளிச்சம் அதிகமாயிருக்கும் நேரத்தில் அவன் ஏணியின் கீழ்ப்படியில் அமர்ந்திருப்பான். மாலையொளி மங்கி, இருள் நெருங்க நெருங்க ஒவ்வொருபடியாக மேலே ஏறி, கடைசியாக வீட்டின் கூரையைத் தொடும் மேற்படியில் அமர்ந்திருப்பான்.

நிலவொளி இருக்கும் நாட்களிலெல்லாம் கியாங் மிகுந்த பிரயாசையுடன் படிப்பான். படிக்கும் நேரம் எப்போது வரும் என்று ஏங்கிக்கொண்டிருப்பான். அமாவாசை நெருங்கி வரும்போது ஓய்வெடுத்துக்கொள்வான்.

பலவருடங்களுக்குப்பிறகு கியாங் பெரும் படிப்பாளி ஆகிவிட்டான். நாட்டின் தலைநகருக்குச் சென்று பல பரீட்சைகளில் தேறினான். அதன் பின்னர் அரசரவையை அடைந்த அவன் அங்கே பெரிய பதவிகள்

(அடுத்தபக்கம் பார்க்க)

உங்களுக்குத் தெரியுமா?





1. பறக்கும் மீன்கள் 500 அடிதூரம்வரை நீர்மட்டத்தின்மேல் தத்தித்தத்திப் போகக்கூடும். இத்தகையமீன்கள் உஷ்ண மிதவுஷ்ண மண்டலங்களிலுள்ள கடல்களில் சாதாரணமாகக் காணப்படுகின்றன. இவை தண்ணீருக்குமேலே கிளம்பி சிறிதுதூரம்சென்றபிறகு நீருக்குள் புகுந்துவிடுகின்றன. இவற்றுள் மிகவும் பலம்வாய்ந்தமீன்கள் சிறுகப்பல்கள் செல்லுகையில் அவற்றின் மேல்தளத்தில் வந்துவிழுவதுண்டு, அல்லது கப்பலைத் தாண்டிக் குதிப்பதுமுண்டு.

2. சஹாரா பாலைவனத்தில் மணற்பரப்புக்கடியில் அநேகஆறுகள் ஓடுகின்றன. பாலைவனங்களிலுள்ள செம்படவர்கள் தண்ணீர்தென்படும் வரையில் மணலைத் தோண்டியெடுத்துவிட்டுத் தூண்டிலால் மீன்களைப் பிடிக்கின்றனர்.

வகித்து நாட்டிற்கும், நாட்டு மக்களுக்கும் நல்லவை பல செய்து நற்புகழ் எய்தினன். படிப்பதற்காகக் கூரைவரை ஏறி, ஏறி இறங்கிய பாலகன் புகழின் கூரைக்கே ஏறிச் சென்றான்.

## கொவ்பாவுர் சுவாமியார்

தவறணை ஒன்றில் ஒரு குருவானவர் நிற்பதைக்கண்ட குடிகாரர் அதிசயமடைந்தனர். இங்கே ஒரு குருவானவருக்கு என்ன அலுவல்? என்று எல்லோரும் அதிசயப்பட்டனர். ஆனால், குருவானவர் ஒரு உதவி பெறும் நோக்கமாகவே அங்குவந்தார். அவர்களிடம் பண உதவி கேட்டார். அவர்களோ ஒரு கொடுமையான கிரிகையைச் செய்தார்கள். ஒருவன் அவருடையமுகத்தில் காறி உமிழ்ந்தான். ஆனால், குருவானவர் கோபிக்கவில்லை. அவனைப்பார்த்து:

"மகனே! நீ எனக்கு இப்போ கொடுக்கவேண்டியதைக் கொடுத்துவிட்டாய்; இனி என்னுடைய ஏழை அனாதைப்பிள்ளைகளுக்கு உதவிசெய்யும்படி இரந்து கேட்கிறேன்" என்றார். இந்தப் பெரிய தாழ்மையையும், அன்பையும் பார்த்திருந்தவர்கள் குருவானவருக்கு வேண்டியமட்டும் பணஉதவி செய்தார்கள். காறிஉமிழ்ந்தவன் பின்பு மனந்திரும்பி ஒருநல்ல கிறீஸ்தவனானான்.

பிள்ளைகளே! இந்தக் குருவானவர் யார் தெரியுமா? இவர் தான் கிளமேன்ற்கொவ்பாவுர் சுவாமியார். இவர் ஒருபெரிய அர்ச்சியசிஷ்டவர். பங்குனி மாதம் 15-ம் திகதி இவரது திருநாளைத் திருச்சபை கொண்டாடுகிறது.

### திருமதி சவிராசி மார்க்குஅவர்களின்
## தேகவியோகம்

நவாலியை ஜனனபதியாகக்கொண்டவரும், அவ்வூர்ச் சம்பேதுருஅப்போஸ்தலர்ஆலய மூப்பராயிருந்து காலஞ்சென்ற திரு. பாவிலுப்பிள்ளையின கனிஷ்டபுதல்வியும், பிரபலவியாபாரி திரு. மாற்குவின் மனைவியும், அப்போஸ்தலிக்க கார்மேல்சபைக் கன்னியாஸ்திரியான சிஸ்றர் காமலின்டாவின் தாயும், நவாலி, சென்பீற்றர்பாடசாலை உதவிஆசிரியை செல்வி அருளம்மா மாற்குவின் தாயும், அதேபாடசாலை உதவிஆசிரியை திருமதி செபமாலையம்மா நேசம்என்பவவின் பேர்த்தியும், அரிப்புக் கத்தோலிக்கபாடசாலையில் கடமையாற்றும் திரு. வை. பூதத்தம்பி ஆசிரியரின் பேர்த்தியுமான சவிராசி (சவிரியம்மா) அவர்கள் தமது 73-ம் வயதில் சென்ற 22-7-56 புதன்கிழமையன்று பரலோக பிராப்தியாயினர்.

இவவின் பூதஉடல் மறுநாட்காலை 8-30மணியளவில் இரட்டை வெண்பரிகள்பூட்டிய இரதத்தில்வைக்துக் கட்டளைக்குரவர் வண. ஏ. சாவே, வண. ஜோண் ஸ்பம்பதி. வண. எம். சூசைதாசர் நல்லையா எனும்குரவர்கள் துக்கசங்கீதம் பாடிச்செல்ல, பாண்டுவாத்தியம் துக்ககீதம்இசைக்க, இனசனர், சிநேகிதர், மரியாயின்சேனையார், மற்றும்திரளானமக்களும் அணிவகுத்துச் செல்லச் சம்பேதுரு அப்போஸ்தலர் ஆலய சேமக்காலைபோய்ச் சேரலாயிற்று ஈற்றில்வண. ஏ. சாவேசுவாமியவர்கள் துக்கசங்கீதம்பாடிக் கடைசி ஆசீர்வாதம்கூறி நிற்க, மக்களின்பிரலாபமத்தியில் பூதஉடல் புதியஓர்கல்லறையில் பூமதானம் செய்யப்படலாயிற்று.

மரித்த விசுவாசியின் ஆன்மா சர்வேசுரனுடைய இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக்கடவது.

## மரண செய்தி

யாழ்ப்பாணம், கூட்டுறவுப்பரிசோதகர் திரு. ச. அ. அருளானந்தம்அவர்களின் பிரியபாரியார் ஆன் (Anne) பிரசவத்திலே நோய்வாய்ப்பட்டு விசேட சிகிச்சைகள் ஒன்றினாலும் குணமுறாது அந்திமதேவதிரவிய அனுமானங்களைக் குறைவறப்பெற்று வெகுஅமைதியாகவும், பாக்கியமாகவும் பூரண அறிவுடன் தனது ஆத்மாவைப் படைத்தோன் கரங்களில் ஒப்படைத்தார்.

அடுத்தநாட்காலை 7மணியளவில் அவரின்பூதவுடல் இனசனர்சிநேகிதர் புடைசூழ ஊர்வலமாக யாழ்ப்பாணம், கொஞ்சேஞ்சிமாதாகோவில கொண்டு செல்லப்பட்டது. அங்கு கோவிலின் மத்தியிலே உயர்மேடையில் வைக்கப்பட்டு, குருப்பிரசாதிகள் வண. எல். ஏ. மைக்கல்சுவாமியவர்களும், வண. ஏ. பிரான்சீஸ்சுவாமியவர்களும் துணைபுரிய இளவாலை, அர்ச். என்றிக்கப்பர் கல்லூரிஅதிபர் வண. எல். ஏ. சிங்கராயர்சுவாமியவர்களால் துக்கப்பாடற்பூசை நிறைவேறியது.

பூசைமுடிந்ததும் இனசனராலும், அர்ச். என்றிக்கப்பர்கல்லூரி உயர்தர வகுப்புமாணவர்களாலும பிரேதவண்டி சேமக்காலைக்கு இழுத்துச்செல்லப்பட்டது. அங்கு காலஞ்சென்றவரின் மைத்துனராகிய வண. எல். ஏ சிங்கராயர் சுவாமியவர்களால் இறுதிஆசீர்வாதம் வழங்கப்பட்டது.

இவரின் மலறவையிட்டு யாழ்ப்பாண மேற்றிராணியாண்டவர் மகாவந். ஜே. எமிலியானுஸ்பிள்ளை அவர்களும், மற்றும் பலகுருப்பிரசாதிகளும், கன்னியாஸ்திரிகளும் அனுதாபம் தெரிவித்தார்கள். கூட்டுறவு உதவிக்கம்மிஷனர்கள் திரு. வி, நடராசா, திரு. வி.கனகசபைஎன்பவர்கள் கூட்டுறவுச்சங்கத்தினரின்சார்பாக மலர்வளையங்கள் பூதவுடல் புதைக்கப்பட்டஇடத்தில் வைத்தனர். மலர்வளையங்கள் யாழ்ப்பாணத் திருக்குடும்ப மடத்தினராலும், இளவாலை, அர்ச். என்றிக்கப்பர் கல்லூரியாலும் வைக்கப்பட்டன.

இவரைஇழந்து துன்புறும் அரிய பத்தா, திரு எஸ். ஏ. அருளானந்தம், மைத்துனர் வண எஸ். ஏ. மைக்கல்சாமி, அரியமக்கள், ஐசிந்தா, நிர்மலா பேர்னடா, தந்தையார் தம்பிராசா, தாயார் திருமதி தம்பிராசா, சகோதரன் அன்ரன் செபஸ்தியன், சகோதரி றேஸ், மைத்துனி மேரியன்ன ராஜரட்டினம் முதலியோருடன் நாமும் அனுதாபப்படுகிறோம்.

R. I. P.

### நேர்த்தியின் பூர்த்தி

யேசுவின் திருஇருதய நாதர், பரிசுத்த அன்னை, கோடி அற்புதரான அர்ச். அந்தோனியார், பரிசுத்த 12-ம் பத்திநாதர் இவர்களிடம் நாங்கள் கேட்டுமன்றாடின மன்றாட்டம் கிடைக்கப்பெற்றது. இன்னும் எங்கள் எண்ணங்கள் நிறைவேற அவர்கள் இரக்கத்தை மென்மேலும் வேண்டுகின்றோம், நேர்த்தியின்பிரகாரம் இதைப் பிரசுரிக்கிறோம்.

"சருவேசுரனுக்குத் தோத்திரம்"
"மாதாவின் மைந்தர்"

போளவத்தை,
தங்கொட்டுவை.

*　*　*

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பரிசுத்த சதாசகாய மாதாவின் வேண்டுதலினாலும், அர்ச். அந்தோனியார், அர்ச். சவேரியாருடைய மன்றாட்டினாலும் நான் கேட்டுக்கொண்ட மன்றாட்டுகள் கிடைத்தன. எனது மனமார்ந்த நன்றியையும், பக்தியையும் அவர்களுக்குத் தெரிவிப்பதுடன், அவர்கள் எனக்குச் செய்த இந்தப் புதுமைகரமான உதவியை பகிரங்கமாக யாவரும் தெரிந்துகொள்வதற்காக இந்த ஸ்தோத்திரத்தைப் பிரசுரிக்கிறேன். அவர்கள் நாமம் புகழப்படுவதாக.

*M. R. Thambyah*

### அர்ச். அன்னம்மாள்
## திருநாள்
### வலித்தூண்டல்

இளவாலைப்பங்கைச்சேர்ந்த வலித்தூண்டலிலே எமதுபாதுகாவலாகக் கோவில்கொண்டிருக்கும் அர்ச். அன்னம்மாள்திருநாள் வழமைபோல் சென்ற26-7-59ஞாயிறுவாரம் சிறப்பாகக் கொண்டாடப்படலாயிற்று. அதற்குஆயத்தமாக 21-ம்தேதி கொடியேற்றத்துடன் உற்சவங்கள் ஆரம்பமாகித் தினமும்காலை திவ்வியபூசையுடனும், மாலை செபமாலை, பிரசங்கம், திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதத்துடனும் முடிவாகிவந்தன. திருநாளுக்கு முந்திய தினமாகிய 25-ம்தேதிசனிக்கிழமை மலர்மாலைகளாலும், மின்சாரதீபங்களாலும் அலங்கரிக்கப்பட்டுத் தேசோமயமாய்க் காட்சியளித்தஆலயத்தில் பலஊர்களிலுமிருந்து திரளாக வந்துதேங்கிய பக்தர்கள்சமுகமாக இரு குரவர்கள் துணைபுரிய, கட்டளைக்குரவர் வண. எஸ் கோமஸ்சுவாமியவர்களால் வேஸ்பர்என்னும் மாலைஆராதனைபாடிச் சற்பிரசாதஆசீர்வாதமும், சுரூபஆசீர்வாதமும் அருளப்பட்டன.

திருநாளன்றுகாலை 7-30மணியளவில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் குழுமியிருக்க, இருகுருப்பிரசாதிகளும் துணைபுரியக் கட்டளைக்குரவரால் திருநாள்பாடற்பூசை நிறைவேறிற்று. பெருந்தொகையானபக்தர்கள் திருவிருந்தருந்தினர். பூசைவேளை வண. எல். ஏ. சிங்கராயர்சுவாமியவர்களால் அர்ச். அன்னம்மாளைப்பற்றி அரிய தோர்பிரசங்கம் செய்யப்பட்டது. பூசைமுடிந்ததும் திருச்சுரூபசுற்றுப்பிரகாரம் ஆரம்பமாயிற்று. பக்தகோடிகள் புடைசூழ்ந்து பாவாலும்நாவாலும் வாழ்த்திப்போற்றி வணங்கித் துதிக்க அர்ச். அன்னம்மாள் அலங்காரகேடகத்திலே எழுந்தருளினார். திரும்பவும் சுற்றுப்பிரகாரம் ஆலயத்தைஅடைந்ததும் திருச்சுரூபஆசீர்வாதம் அருளப்பட்டது. பின்னர் அன்று பிற்பகல் திவ்வியசற்பிரசாதஆசீர்வாதத்துடன் திருநாள் இனிதே முடிவெய்தியது.

—நிருபர்.

### நேர்த்தியின் பூர்த்தி

யேசுவின் இரக்கத்தினாலும், பரி. சதாசகாயமாதா, அர்ச். ஆரோக்கியநாதர், கச்சுமலை, அர்ச். அந்தோனியார் இவர்களின் மன்றாட்டினாலும் எனக்குஏற்பட்ட சயரோகம் குணமானது. மேலும், சகல துன்பங்களிலிருந்தும் காப்பாற்ற இரந்து கொள்ளுகிறேன். நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன். பிரசுரிக்கப் பிந்தியமைக்கு மன்னிப்புக் கோருகிறேன்.

சி. அற்புதம்

நெடுந்தீவு

● உலகயுத்தம்முடிந்து பதினான்கு வருடங்கள்சென்றும் உலகில்இன்னும் 3கோடியே 10லட்சம்மக்கள் வீடுவாசலின்றியும், தங்கள்நாடுகள், வீடுவாசல்களிலிருந்து இடம்பெயர்க்கப் பட்டவர்களாயும் இருந்துவருவதாகச் சர்வதேச கத்தோலிக்க குடியேற்றகம் மிஷன் தலைவரான திரு. ஜெம்ஸ் ஜே. நொறிஸ் தெரிவித்திருக்கின்றார்.

● இற்றைக்குச்சுமார் 5,500 வருடங்களின் முன்னே பார்சீகக்குடாவைச் சேர்ந்தவரும் நவமாக எதையும் கண்டுபிடிக்கும் திறமைவாய்ந்தவருமான கமக்காரர் ஒருவர் இருமரச்சில்லுகளை ஒரு மரக்குற்றியின் இருபக்கங்களிலும் பொருத்தி முதலாவது சில்லுவண்டியைச் செய்தாரென்றும், தற்கால நாகரீக வண்டிகளின் ஆரம்பம் இந்தச்சில்லுவண்டியேயென்றும் சரித்திராசிரியர்கள் கூறுகின்றார்கள்.

### அர்ச்சியசிஷ்ட அந்தோனியாரின் தருமக்கோணம்



சென் வின்சென்ற் டி போல்
தருமசபை
யாழ்ப்பாணம்

### கேட்ட நன்மைகள் அனுகூலமானதினால் அப்பத்துக்கு அனுப்பப்பட்ட காணிக்கைகள்

கல்கமுவா: ஆர். யுவக்கீன் 1-00, ஏ. ஜே. பிள்ளை 1-00, வி. லோறன்ஸ் 2-00, எம். பிரான்சிஸ் 2-00, மேரி ஸ்ரெல்லா பீரிஸ் 2-00, வி. சந்தியாப்பிள்ளை 1-00, ரி. ஜேற்றூட்டம்மா 1-00, ஏ. மரியானாள் -50 — மாம்புரி: ஜே. டி. அல்மேதா 5-00, டி. தமியாம்பிள்ளை 3-00 — திருக்கேஸ்வரம்: ஏ. பிலோமினா 1-00 — கற்றன்: ஏ. அந்தோனிப்பிள்ளை 1-00 — நேரியகுளம்: ஜி. சின்னப்பு 1-00, எஸ். மாற்கு 1-00 — அரிப்பு: மேரி குருஸ் 2-00, மரியறேசா குருஸ் 5-00 — கல்பிற்றி: எஸ். பி. நோயிஸ் 6-00 — மலாயா: ஏ. மாட்டீன் 45-00 — முள்ளிக்குளம்: ஜி. வின்சென்றம்மா 2-00, எஸ். லூக்கேஸ் 1-00 — இளவாலை: மேரி திரேசா 4-00 — சிங்கப்பூர்: எம். ஏ. பெஞ்சமின் 10-00 — மிருசுவில்: பி. ஜே. சிறில் 1-00 — இற்றாலை: பிறுங் அன்ரன் 3-00, எஸ். மாசிலாமேரி 2-00, மிசெஸ் பிறுங் அன்ரன் 6-00, ஏ. பிலிப்பு 5-00 — பாஷையூர்: ரி. பறுணாந்து 4-00 — கொழும்பு: ஜி அந்திரேஸ் 3-00 — மானிப்பாய்: ரி. சின்னத்துரை 2-00 — உடப்புவா: ஆர். எம். பி. பிள்ளை 3-00 — நீர்கொழும்பு: மிசெஸ் ஏ. என். வில்லவராயர் 3-00, எஸ். ஜி. செல்லத்துரை 5-00 — கம்பளை: மிசெஸ் ஏ. டி. சேவியர் 5-00 — ருகம: மிசெஸ் ஜே. றெட்னம் 7-00 — புத்தளம்: பிறுங் எல் லீயோ 4-00 — நனுஓயா: பி. சிதம்பரம் 25-00 — சக்கோட்டை: எஸ். அன்னம்மா 1-00 — மன்னார்: சி. ஏ. வி. பத்மராசா 1-00, மிசெஸ் ஈ. சி. அரசரட்னம் 1-00 — கன்னாரேட்டு: எஸ். பொன்னையா 2-00 — காக்காவத்தை: ரி. மோசேஸ் 2-00 — டிம்போடிரு: பி. எவ். சூசைப்பிள்ளை 1-00 — வட்டப்புலம்: ஜி. எம். லூர்த்து 1-50, இ. அன்னம்மா 1-00 — பனுவில்லா: ஏ. சின்னப்பன் 2-00 — பருத்தித்துறை: ஜி. எம். அருளப்பு 3-00, எம். நேசம்மா 2-00 — கொச்சிக்கடை: எஸ். கந்தையா 2-00 — கட்டைக்காடு: ஆர். எஸ். பி. எஸ். பிள்ளை 2-00 — யாழ்ப்பாணம்: பி. சி. பொன்னையா 1-00, எம் சின்னப்பு 1-00, லில்லி சிற்றம்பலம் 3-00.


## விளம்பரம்

### யாழ்ப்பாண மாநகரசபை

### நாய் பிடிப்பவர் வேலைக்கான வெற்றிடம்

நாய்பிடிப்பவர் வேலைக்கான விண்ணப்பங்கள் முக்கியமாக யாழ்ப்பாண நகரத்தில் வசிப்பவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் எழுத்துமூலம் 1959-ம் ஆண்டு ஆவணிமாதம் 20-ஆம் திகதிக்கு முன்னர் கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தில் வயது, அனுபவம், முந்திய வேலைகள் ஏதாவதிருந்தால் அவற்றின் விபரம் முதலியன குறிப்பிட்டிருத்தல் வேண்டும்

மேற்குறித்தவேலைக்குத் தெரிவுசெய்யப்பட்டவருக்கு, அவர் பிடித்து, கொன்று புதைக்கும் ஒவ்வொரு நாய்க்கும் ரூபா 1-25 வீதம் வழங்கப்படும்.

**கொமிஷனர்,**
யாழ்ப்பாண மாநகரசபை.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
30-7-59.


Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, August 6-1959.